[illegible]

[illegible] 10 [illegible] 5
16 NOV 1924

JL
[illegible]211, N15AB
N24.10.5.
187469

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 10 } இரக்தாட்சி௵ கார்த்திகை௴ கஉ { பகுதி 5
1924௵ நவம்பர்௴ 16உ

## கடவுள் வணக்கம்.

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா முனிவர்
சித்தராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரில்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிர்போற்
கலந்தெந் நாளுந்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம். (1)

விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே யானந்தக்
கடலாய் வேறோன்
றெண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளு
மிறையே யுன்றன்
றண்ணாருஞ் சாந்தவரு டனைநினைந்து கரமலர்கள்
தலைமேற் கொள்வாம். (2)

கள்ளம் பொருந்து மடநெஞ்சமே கொடுங் காலர் வந்தால்
உள்ளன் பவர்கட் குண்டோ வில்லையே யுலகின்ற வன்னை
வள்ளம் பொருந்து மலரடி காண மன்றாடு மின்ப
வெள்ளச் செம்பாதப் புணையே யல்லாற் கதிவே றில்லையே. (3)

தன்மய மான சுபாவத்தின் மெள்ளத் தலைப்படுங் கால்
மின்மய மான சகம்யா துரைத்தென் வெளியி லுய்த்த
சின்மய முத்திரைக் கையே மெய்யாத் தெளிந்த நெஞ்சே
நின்மய மென்மய மெல்லா நிறைந்த நிரா மயமே. (4)

## அரும்பொருள் விளக்கம்.

1. அருமறையின் சிரப்பொருளாய்=அரிய வேதங்களின் சிறந்த முடிவான பொருளாம்.

தெரிவரிய=தெரிந்துகொள்வதற் கரிதாகிய.

காரணம் கற்பனைக் கடந்த=தனக்கொரு காரணமுமில்லாததாய்க் கற்பனைகளுக்கடங்காததாகிய.

"மலரின் மணம், எள்ளில் எண்ணெய், உடலுயிர்போல்" என்றது, ஒன்றென்றும் இரண்டென்றும் சொல்லொணு அத்துவித நிலை.

2. "விண்ணுதி பூதமெலாம் தன் அகத்திலடக்கி"—ஈசுவரன் சர்வ வியாபகமாகவும், மற்ற எல்லாப் பிரபஞ்சங்களும் அவனில் வியாப்பியமாகவும் அடங்கியுள்ளதால் அவ்வாறு கூறினர்.

வெறு வெளியாகி=சிதாகாச சொரூபியாய்.

ஞானக்கண்ணுரக்கண்ட அன்பர்=ஞானமாகிய கண்ணினல் உனது நிஜ சொரூபத்தைத் தரிசித்த பக்தர்.

ஆனந்தக்கடலாய்=ஆனந்தமயமாய்—துக்கமற்ற அனுபவ முடையவராய்.

வேறென்றெண்ணுதபடித் தாஞகச் செய்தருளும் இறையே=(அத்தகைய அன்பர்கள்) வேருெரு சிந்தனையும் கொள்ளாவண்ணம் அவர்களைத் தன்மயமாக்கிக்கொள்ளும் பரம்பொருளே.

(பிரம்ம சாக்ஷாத்காரமான நிலையில் இரண்டாவதாக ஒரு வஸ்துவில்லாததாலும், அந்த நிலை அடையவேண்டிய யாவும் அடைந்த பூரண திருப்தியான நிலை யாதலானும், நித்தியானந்த அனுபவமுடைய தாதலாலும் அங்கு சிந்தனைக்கே யிடமில்லை யென்பது விளங்கவே அவ்வாறு கூறியருளினர். மேலும் எந்தப் பொருளிலும் இன்பமில்லை; ஆன்மாவின் இன்பமே அவற்றில் உள்ளதுபோல் தோன்றும் என்ற உண்மை ஞான நிலையில் பிரத்தியட்சமாய்த் தெரிந்துவிடுவதால் அந்த நிலையை யடைந்தபின் வேறொன்றை நினைக்கவேண்டிய அவசியமில்லாமற் போகிறது.

"[illegible]ருளிலும் இன்பெய்தல் அம்மானே
[illegible]யென் றிசைந்தேன்கா ணம்மானே
இனியோர் [illegible]ருளையு மெண்ணிநின் றம்மானே
இச்சை செ[illegible]னதி லின்பமில் லம்மானே
ஆசை ப[illegible] யற்றேன்கா ணம்மானே
[illegible]ய ஞதலா லம்மானே."—(ஸ்ரீ குமாரதேவர்.)

[illegible]ழலர்கள [illegible]மேற்கொள்வாம்=சிரமேற் கைகூப்பி அஞ்சலி செய்வாம்.

3. கள்ளம் பொருந்து=வஞ்சமுடைய.

மடநெஞ்சமே=மூடத்தனம் வாய்ந்த மனமே.

காலர்=யமதூதர்கள்.



உள்ளன்பு அவர்கட்கு உண்டோ, இல்லையே=அந்த யமதூதர்களுக்கு மன இரக்கம் உண்டோ? இல்லையல்லவா!

(அதனல்)

உலகீன்ற அன்னை=அண்டரண்ட சராசரங்களனைத்தும் படைத்த பராசத்தியாகிய உமாதேவியார்.

(பரப்பிரம்மம் அல்லது பரசிவம் தொழிலற்றது. அதனேடு அபின்னமாயுள்ள சத்தியினிடத்திலே (பிரம்மசந்நிதான விசேடத்தால்) சிருட்டியாதிகிருத்தியங்கள் நடைபெறுகின்றனவாதலின் "உலகீன்ற அன்னை" என்றூர். 'அர்த்தநாரி' சொரூபமே பிரம்மமும் சத்தியும் கூடிய சொரூபத்தின் குறியாகும். சிவம் சத்தியோடு சம்பந்தப்பட்டால்தான் சிருட்டியுண்டாகும்.

"அவனசைந் திடிலொரு வணுவசைந் திடும்
அவனசை யாவிடி லணுவசைந் திடா
**சிவன்சத்தி யோடுறிற் செகம் விரிந்திடும்**
சிவன்ற னித்திடில் விரிசக மொடுங்குமால்."—(வள்ளலார்.)

வள்ளம்பொருந்தும்=கிண்ணத்தினைப்போல் தோன்றும்.

மலரடி=தாமரை மலர்போன்ற திருவடி.

மன்று ஆடும்=பொன்னம்பலத்தில் நிருத்தம் செய்யும்.

இன்பவெள்ளச் செம்பாதப்புணை=ஆனந்தக்கடலாகிய இறைவனது சேவடியாகிய தெப்பம்.

"பரமசிவத்தின் அருளாகிய தெப்பமின்றி பிறப்பிறப்பாகிய கடலைக் கடக்க ஒண்ணுது. அதாவது ஈசுவரனருள் பெற்றுலன்றி முத்தி கிட்டாது" என்பது கருத்தாகும்.

4. தன்மயமான சுபாவத்தில்=ஆன்ம சாக்ஷாத்கார நிலையில்.

மெள்ளத் தலைப்படுங்கால்=அடைவாகப் பிரவேசித்தால்—படிப்படியாக அந்த நிலையை யடையத்தொடங்கிவிட்டால் என்றபடி.

மின்மயமான சகம்=மின்னலைப்போல் தோன்றி யழியும் உலகம்.

யாதுரைத்தென் = (நம்மைப்பற்றி) எவ்வாறு கூறிக்கொண்டாலென்ன (அதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை என்றபடி.)

சின்மய முத்திரைக்கையே மெய்யாகத் தெளிந்தநெஞ்சே=பரமாசாரியர் திருக்கரத்தால் காட்டிய மௌனமுத்திரை (சின்முத்திரை)யின் உள்ளக் கருத்தே சத்தியம் என்று ஐயமற உணர்ந்த மனமே!

நின்மயம் என்மயம் எல்லாம் நிறைந்த நிராமயமே=உன் சொரூபம் என் சொரூபம் என்ற வேற்றுமையின்றி எல்லாம் ஒரே அகண்டாகார நிராமயமான சொரூபமேயாக முடியும்.

(சின்முத்திரையின் இரகசியத்தைக் குருமுகத்தில் கேட்டுணரவேண்டும்.)

# ஆனந்தபோதினி

இரக்தாட்சி௵ கார்த்திகைமீ ௧௨

## சிந்தனையும் செயலும்.

பரம்பொருளால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பூவுலகின் கண்ணுள்ள சீவராசிகளனைத்தும் ஏதேனும் ஒரு செயலைச் செய்துகொண்டேதானிருக்கின்றன என்பது யாவருமறிந்த விஷயமே. செயல் என்றாலும், தொழில் என்றாலும், கர்மம் என்றாலும் ஒன்றே. ஆனால் செயல்கள் ஏககாலத்தில் செயல்களாக நிகழ்வதில்லை. செயல் நிகழ்வதன் காரணம் சிந்தனை அல்லது எண்ணத்திலிருக்கிறது. அந்த எண்ணம் மனதில் உதிக்கிறது. மனதில் ஒரு எண்ணம் உதித்தபின்பே அது செயலாக வெளிப்படுகிறது. எண்ணமாகிய காரணம் தோற்றப்படுவதில்லை. ஒரு மனிதன் நம் எதிரில் நின்றுகொண்டே நம்மை யடிக்கவேண்டுமென்று நினைக்கிறான். நமக்குக் காரணமாகிய அவன் எண்ணம் தோற்றப்படுவதில்லை. அது காரியமாக வெளிப்பட்டபின்பே தெரிகிறது. அது வெளிப்பட்டபின், இவன் நம்மை யடிக்க எண்ணினான் என்று நிச்சயமாய்க் கூறுவோம். ஏனெனில் காரணமின்றிக் காரியம் நிகழாதாதலின்.

மனிதன் செயல்கள், மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினால் நிகழ்கின்றன. முதலில் மனதால் ஒன்றை நினைக்கிறான். அதை வாக்கால் வெளியிடுகிறான். கைகால்களாகிய அவயவங்களால் செய்கிறான். ஆனால் மூல காரணமாய் எதையும் நினைப்பது மனமே. பிறகுதான் வேலையாட்கள்போல் வாக்கும், காயமும் அவன் எண்ணிய தொழிலைச் செய்கின்றன.

மிருகங்களும் நம்மைப்போன்றே மனதில் எண்ணியே ஒரு காரியத்தைச் செய்கின்றனவா வெனின் அவ்வாறுதான் யூகிக்க வேண்டி யிருக்கிறது. அவைகள் தம் எண்ணத்தை வாக்கால்



வெளியிடற்குப் பாஷையில்லையோ, அல்லது அவற்றின் ஒலிவடிவ அல்லது குறிப்புவடிவ பாஷையை யுணரும் ஆற்றல் நமக்கில்லையோ, சொல்வதற்கில்லை. ஆனால் எண்ணம்மட்டும் உண்டு என்றே கூறலாம். கதவு மூடப்பட்டிருக்கும் ஒரு அறையிலிருக்கும் நாய் அக்கதவைத் திறந்துகொண்டு வெளியில் சென்று மலசல விசர்ச்சனம் செய்துவிட்டு உள்ளே வருகிறதைக் காண்கிறோம். இச்சந்தர்ப்பத்தில் மனதில் எண்ணம் உதிப்பதோடு காரிய காரண உணர்ச்சியும், கொஞ்சம் அறிவு விளக்கமும் கூட இருக்கின்றனவென்று அறியலாகும்.

மலசலபாதை யேற்பட்டதே, அவற்றை வெளித் தள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. பிறகு இங்கு அக்காரியத்தைச் செய்யலாகாது, இதற்காக வெளியில் செல்லவேண்டும் என்ற உணர்ச்சியுண்டாகிறது. அதன் பிறகு கதவு மூடப்பட்டிருக்கிறது, இதை முன்னங்காலால் தள்ளினால் திறந்துகொள்ளும் என்ற அறிவு உதிப்பதால் அவ்வாறே செய்கிறது. ஆனால் பாப புண்ணியங்களை யுண்டாக்கும் எண்ணங்கள் அவற்றிற்கில்லை. அதனால் அச்சன்மங்களில் முன்செய்த கர்மங்களை யனுபவிப்பதாகிய கர்மம் ஒன்றுமட்டுமே நடக்கிறது.

இனி மனிதனுடைய எண்ணத்தைக் கவனிப்போம். மனிதனுக்கு அளிக்கப்பட்ட மனம் வாக்குக்காயங்களாகியவை அவன் முன்செய்த கர்மபலனுக்குத் தக்கபடியே யமைந்திருக்கின்றன. மாயா காரியமாகிய இவற்றில் மாயையின் குணங்களாகிய சத்துவம், இராஜசு, தமசு என்ற முக்குணங்களின் சமபந்தமுண்டு. ஆகையால் அவன் எண்ணம் வாக்கு காயங்கள் அவற்றிற்குத் தக்கவாறாகவே யிருக்கும். அப்படியிருப்பினும் ஆண்டவன் இவனுக்குப் பகுத்தறிவை யளித்திருப்பதால் தன் செயலால் விளையும் பயனுக்கு இவன் பொறுப்பாளியாகிறான்.

எண்ணத்தால்மட்டுமே மனிதன் பாபபுண்ணியங்களை யடையலாகும். நல்ல எண்ணம் நல்ல பலனையும் தீயவெண்ணம் தீய பலனையும் அளிக்கும். ஆயினும் இவன் தன் எண்ணத்தைச் செய்கையாக மாற்றினாலன்றித் தன்வரையில் காரியசித்தியடையமாட்டான். அதாவது இச்சித்த பலனை யடையமாட்டான். எண்ணமே செய்கையாக மாறுவதால் எண்ணத்திற்குத் தக்கபடியே பலன் கிடைக்கும் அன்றி, செயலினால் ஏற்பட்ட முடிவின்படி பலன்

கிடைக்காது. ஒவ்வொருசமயத்தில் நல்ல எண்ணங்கொண்டு ஆரம்பித்த செய்கை தீய முடிவை யடையலாகும். ஆனால் அதனால் தீய பலன்கள் சித்திக்காது. இதற்கு ஒரு திருட்டாந்தம் மட்டும் கூறுகிறோம்.

ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடிக்க முயல்கிறது. அதைக் கண்ட ஒருவன் பாம்பை வெருட்டிவிடுகிறான். அல்லது தவளையைச் சட்டென்றெடுத்துக் குளத்தில் விட்டுவிடுகிறான். பாம்பு இரையையிழந்து வருத்தத்தோடு செல்கிறது. தவளை கோரமான மரணத்தினின்றும் தப்பிச் சந்தோஷத்தோடு போகிறது. இதனால் அம்மனிதனுக்குப் பாவம் சித்திக்குமா புண்ணியம் சித்திக்குமா? என்று ஒருசமயம் ஒருவர் நம்மை வினவினார். உண்மையென்னவெனில், பாவமும் புண்ணியமும் அவன் என்ன எண்ணங்கொண்டு அக்காரியத்தைச் செய்தானோ அதைப் பொருத்ததாகவிருக்கிறது. எவ்வாறெனின், அவன் “அந்தோ தவளை கொல்லப்படப்போகிறதே” என்று அதன்மேலுண்டான கருணையாலேயே அக்காரியத்தைச் செய்தால் புண்ணியபலனே யடைவான். அப்படிக்கின்றி “இந்தப் பாம்பிற்கு இரையகப்படாமற் செய்யவேண்டும்” என்ற எண்ணத்தோடுமட்டும் செய்திருந்தால் ஒருவர் உணவை யபகரித்த பாபமே யடைவான்.

சில சமயங்களில் நல்ல எண்ணத்தோடு செய்யும் செயலால் தீய பயன் விளைவதுமுண்டு. ஒரு மனிதனைப் புலி பிடித்துக்கொண்டதைக் கண்ட ஒருவன் அம்மனிதனைக் காப்பாற்றப் புலியைநோக்கிச் சுடுகிறான். ஆனால் அச்சமயம் புலி இடம்பெயர்வதால் குண்டு மனிதன்மேல் பட்டு அவன் மடிகிறான். பிளவை கண்ட ஒருவனுக்கு இரணவைத்தியர் சத்திரமிடுகிறார். அவன் இறந்துபோகிறான். இச் சந்தர்ப்பங்களில் அவர்கள் செய்கைகளால் பாபமுண்டாகாது. மேலும் இவர்கள் தங்கள் செய்கையவ்வாறு எண்ணத்திற்கு மாறாய் முடிந்ததற்கு மனவருத்தப்படுகிறார்களேயன்றி மகிழ்ச்சியடைவதில்லை. இவ்வாறே கெட்ட எண்ணத்தோடு செய்யும் காரியத்தால் நல்ல பயன் விளைந்தாலும், அதைச் செய்தவனுக்கு ஒருபோதும் நற்பயன் சித்திக்காது. அவன் தீயவெண்ணத்திற்குத் தக்க பாபமே சித்தியாகும்.

ஒருவன் சில விஷயங்களில் எண்ணத்தால்மட்டுமே காரிய சித்தியடையக்கூடும். ஈசுவரனருளைப் பெறவேண்டுமாயின், ஈசு



வரனிடத்தில் பூரண அன்புவைத்து சதா அவனைச் சிந்திப்பதாலேயே அவனருளைப் பெறலாகும். ஆனால் இலௌகிகத்தில் ஒருவன் வாஞ்சித வஸ்துவைப் பெறவேண்டுமாயின் மனதில் எண்ணிக்கொள்வதால் மட்டும் பெறமுடியாது. எண்ணப்படி ஊக்கத்தோடு செய்யவேண்டிய காரியத்தைச் செய்தால்தான் பெறலாகும்.

நமது நாட்டார் இப்போது மற்ற நாட்டார்களைப்போல் முன்னேற்றமடையவேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஆனால் நம்மிடம் எண்ணம்மட்டும் அதிகமாக விருக்கிறதேயொழிய எண்ணியதைப் பெறவேண்டியதற்கு அவசியமான செய்கையில்லை. இது நமது முன்னேற்றத்திற்கு முக்கியமான ஒரு இடையூறாகும். ஒருவன் தான் கோரிய வஸ்துவை யடையவேண்டுமானால் அவன் மட்டும் அதற்கு வேண்டிய முயற்சியைச் செய்தால் பயனடைவான். ஒரு குடும்பம் க்ஷேமமடையவேண்டுமாயின் அக்குடும்பத்திலுள்ள மூத்தோர் ஒற்றுமையோடும் ஊக்கத்தோடும் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். அவ்வாறே ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின், அந் நாட்டிலுள்ளோரிற் பெரும்பாலர் ஊக்கத்தோடு தங்கள் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தாம் செய்யவேண்டிய அவசியமான காரியங்களைச் செய்தால்தான் அந்நாடு முன்னேற்றமடையும்.

நமது தாய்நாடு, முன்பு நாகரீகம், செல்வம் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, கைத்தொழில், வர்த்தகம், ஞானம், வீரம் முதலிய பல துறைகளிலும் உன்னத நிலைமையிலிருந்தது. இப்போது அது யாவற்றையு மிழந்து, தன்னிடத்தில் ஆதியில் தானம்பெற்றுச் சென்ற ஒரு அன்னியனிடம்போய்க் கையேந்தி நிற்கும் ஒருவனுடைய பரிதாபமான நிலைமையில் இருக்கிறது. இது தன் பழைய நிலையையடைய நாம் என்ன செய்யவேண்டுமென்பது நமக்குத் தெரியாமலில்லை. அறிவாளிகளாகிய நமது பெரியோர் பன்முறை அவற்றைப்பற்றி இடித்திடித்துக் கூறுகிறார்கள். கூறிக்கொண்டே யிருக்கிறார்கள். நாம் ஒருவருக்கொருவர் “இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டும். நாம் மட்டும் ........வர் கூறுகிறபடி யாவரும் ஒருமனப்பட்டு நடந்தோமோ, இன்னொருவர் தயவுக்கு எள்ளளவும் எதிர்பாராமல் சீக்கிரம் உன்னத பதவியை யடைவோம் என்பதில் சற்றும் அய்யமேயில்லை”

என்று பலவாறு கூறிக்கொள்கிறோம். அதுவும் அப்போதே, பேசுங் காரியம் அனுபவத்தில் செய்து முடிந்து நாளைக்கே பலன் கைக்கு வருமாபோல் சந்தோஷத்தோடு கூறுகிறோம்.

அந்தோ, ஆனால் உண்மையில் முழுமையும் சிந்தனையில் மட்டுமே யிருக்கின்றதன்றி எள்ளளவுகூட செய்கையாகப் பரிணமிக்கவில்லை. பி-ஏ. பரீக்ஷைக்குச் செல்லும் ஒருவனை நோக்கி "நீ பரிக்ஷையில் தேறியதே எந்த இலாகாவில் உத்தியோகம் பார்க்கப் போகிறாய்?" என்று அவனது நண்பர் ஒருவர் கேட்டபோது அவன் வெறுப்போடு "சட் எவ்வித அடிமைத் தொழிலுக்கும் போகேன். எனக்குப் பன்னிரண்டு வேலி முதல்தர பூமியிருக்கிறது. அதில் ஆயில் எஞ்சின் [எண்ணெயால் இயங்கும் (நீர் பாய்ச்சு) எந்திரம்] வைத்து சாத்திரயுக்தமாய் விவசாயத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப் போகிறேன். இராஜாவைப்போல் மேல் அதிகாரம் செய்துகொண்டு சுகமாய் நிம்மதியாய் சுயாதீனமாய்க் காலங்கழிப்பதை விட்டுக் கூலிவேலைக்கு என் போகவேண்டும்?" என்றான். அவன் கூறியதைக்கேட்ட நண்பர் (அவர் ஒரு சிறு மிட்டாதார்) "மிக்க சந்தோடம். நமது நாட்டாரில் படித்தவர்களில் பெரும்பாலார்க்கு உமக்கிருக்கும் புத்தியிருந்தால் நம் நாடு விவசாயம், வர்த்தகம் கைத்தொழில் முதலியவற்றில் சீக்கிரத்தில் முன்னேற்றமடைந்து பழைபபடி பொன்காய்க்கும் நன்னாடாகிவிடுமே" என்றார்.

ஆச்சு; அந்த ஆள் பி-ஏ. முதல் வகுப்பில் தேறிவிட்டார். ஒரு வருடங்கழிந்து மிட்டாதார் அவரைத் திண்டிவனத்தில் குற்றவிசாரணை செய்யும் நீதவான் கச்சேரிக்கருகில் கண்டு திடுக்கிட்டு நின்றார். ஏனெனில் பி-ஏ. பட்டதாரி போலீஸ் உத்தியோக உடைதரித்துக்கொண்டு, இரண்டு போலீஸ் சேவர்களோடு ஒரு கைதியை விசாரணைக்கழைத்துக்கொண்டு செல்கிறார். மிட்டாதார் "என்ன ? வேலையிலமர்ந்துவிட்டதுபோல் காண்கிறது" என்றார்.

அதற்கு அவர் பெருமையோடு "ஆம். ஆம். ஸப் இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்துவிட்டது. விவசாயம், ஒரு ஜோரான வேலையாகத் தோன்றவில்லை. சதா நாட்டுப்புறத்தில் உறங்கிக்கிடக்க வேண்டும். மன்னிக்கவேண்டும்; மாஜிஸ்டிரேட் வந்துவிட்டிருப்பார். பிறகு வந்து காண்கிறேன். விவசாயம் செய்வோர் செய்



தால் இத்தகைய தொழிலுக்கும் ஆட்கள் வேண்டுமல்லவோ" என்றார்.

மிட்டாதார்:—"ஆம். ஆம். இராஜாமட்டுமிருந்தால், தோட்டியும் வேண்டும் தலையாரியும் வேண்டும்" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

நேயர்களே! நாம் இம்மாதிரி எண்ணத்தில்மட்டும் இராஜரீகம் செய்யவேண்டியதற் கவசியமான யோசனைகளை வைத்துக்கொண்டு, வாக்கால்மட்டும் அவற்றைக் கூறிக்கொண்டு, செய்கையில் நேர்மாறாக நடந்துகொண்டிருந்தால் ஒருபோதும் நம் தாய்நாடு க்ஷேமநிலை யெய்தாது. நம் க்ஷாமநிலை யொழியாது. நமக்குப் போதுமான உணர்வு உதிக்காவிடின் நம் நாட்டுப் பெரியார் போதிக்கும் வண்ணமாவது செய்கையில் நடந்துகொண்டாலன்றி, நம் நாடு மற்ற நாடுகளைப்போல் செல்வமும், பலமும், மதிப்பும் பெற்று பூர்வீக உன்னத நிலையை யடையவேண்டுமென்று நாம் கொண்டிருக்கும் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. தூங்கும் போதுதான் இருண்ட மாய்கையில் அறிவு மங்கிக் கிடந்தோம். தேகத்தில் சாணம் பூசப்பட்டு கரும்புள்ளி செம்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை யுணராதிருந்தோம். மானாபிமான உணர்ச்சியற்றுக் கிடந்தோம்.

பரமன் கிருபையால் விழிப்புவந்து மேல்கண்டவற்றையும், அவற்றைக்கண்டு அன்னியர் நம்மை ஏளனம் செய்வதோடு சே சே! எட்டநில் என்று அவமதித்துக் கேவலமாய் நடத்துவதையும் உணர்ந்தபின்பும் நாம் தேகத்தின்மேல் பூசப்பட்டுள்ள சாணம் முதலியவற்றைக் கழுவ முயலாதிருந்தால் இன்னும் போகப்போக நமது கதி என்னாகும் என்று சிந்தியுங்கள். பரமகருணாநிதியாகிய பரம்பொருள் நமக்கு நல்லறிவுச்சுடர் கொளுவி அருள்புரிவானாக. ஓம்தத்ஸத்.

---

## மாணவரும் சுருட்டும்.

சகோதர சகோதரிகளே! நமது "ஆனந்தபோதினி"யில் புகையினாலுண்டாகுங் கெடுதிகளைப்பற்றிப் பன்முறை தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. தற்கால மாணவர்களின் ஒழுக்கக் குறைவைப்பற்றியும் பன்முறை வரையப்பட்டிருக்கிறது. ஆயினும் நம் நாட்டிற்கே பெருங் கேட்டை விளைவிக்கும் இத்தீய நடக்கை யொழியுமட்டும் இதைப்பற்றி முறையிட்டுக்கொண்டே யிருக்கவேண்டியது அத்தியாவசியமேயாகும்.

நமது மக்கள் மேல்நாட்டு நாகரீகப் பழக்கத்தால் அடையும் தீங்கோ மிகக் கொடியது. முதல்படி ஆசாரவீனர்களாகிறார்கள். இரண்டாவது தெய்வசிந்தனை மறந்தொழிகிறது. முடிவில் பணம் சம்பாதிப்பதும்—அது எந்த வழியிலாயினும் சரி—உலக போகங்களை யனுபவிப்பதுமே இச் சன்மத்தில் அவர்கள் செய்யவேண்டிய காரியங்களாக மதித்துக் கடைசியில் இரக்கமற்ற காலனுக் காளாகிறார்கள். முற்காலத்தில்—40, 50 வருடங்களுக்குமுன்வரையில்—சிறுவர்கள் பள்ளிக்குச் சென்றதே சரஸ்வதிதோத்திரம் செய்யவேண்டும்., மாலை கடைசியாய் வீட்டிற்குத் திரும்பும்போதும் கடவுள் வணக்கங் கூறவேண்டும். "காலையில் எழுந்திருந்து நித்திய கடன்களை முடித்துக்கொண்டு விநாயகரைப் பூசித்துவிட்டுக் காலைப்போசனம் அருந்தி பாடசாலைக்கு வருகிறோம்" என்ற அர்த்தமுள்ள பாட்டை உபாத்தியாயர் முன் கூறிவிட்டுத்தான் வீட்டிற்குத் திரும்பவேண்டும். காலையில் வரும்போது அவனவன் நெற்றியில் மதக்குறியாகிய விபூதியோ திருமண்ணோ அணிந்துவரவேண்டும். இன்றேல் அவன் நெற்றியில் சாணத்தால் பொட்டு வைப்பதே அதற்குத் தண்டனையாகும். அவர்கள் எந்தப் பாட புத்தகம் படிக்கத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் இருக்கும். அக்ஷராப்பியாசம் செய்யும் ஆரம்பத்திலேயே முதல் பிரணவ அக்ஷரமும் பிறகு ஈசுவரநாமத்தின் வணக்கத்தைக் கூறும் அக்ஷரங்களுமே கற்பிக்கப்படும். பிறகுதான் கிரமமாக உயிர் மெய் எழுத்துகள் கற்பிக்கப்படும்.

இப்போது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் எந்தப் புத்தகத்திலும் கடவுள் வணக்கமே கிடையாது. கடவுளைப்பற்றியாவது ஒழுக்கத்தைப் பற்றியாவது போதிக்கப்படுவதே யில்லை. "ஓதலிற் சிறந்தன்றொழுக்க முடைமை" என்று நமது மூதாட்டியார் கூறியருளியதை, இக்காலத்து மேல்நாட்டு நாகரீகத்திற் கூடாதென்று விட்டனர்போலும். நாம் பிள்ளைகளுக்குப் பாடம் ஏறுகிறது என்று எண்ணிக்கொள்கிறோம். உண்மையில் அவர்கள் வகுப்பில் ஏற ஏறக் கூடவே மேல்நாட்டு ஆசாரந்தான் ஏறிக்கொண்டேபோகிறது. அந்த ஆசாரப்படி உடை தரிக்கவும், தலையில் ஒரு பக்கம் அரை மயிர், ஒருபக்கம் கால் மயிர், அடிப்பக்கம் அரைக்கால் மயிர் வைக்கவும் தொடங்கியபின் நெற்றியில் மதக்குறி யணிவது அவலக்ஷணமாகக் கருதப்படுகிறது. யாவர்க்கும் ஆன்மார்த்தம், மதாசார ஒழுக்கம் முதலியவற்றைப் போதிக்கவேண்டிய முதல்வருணத்தாரே இம்மாதிரி நடக்கத் துணிந்தால் மற்றைய க்ஷத்திரிய வைசியாதியோர் கெட்டழியக் கேட்கவும் வேண்டுமோ. நம்மக்களின் ஆன்மார்த்தந்தான் இக்கதியிலிருக்கிறதெனின் இலௌகிக ஒழுக்கமேனும் கவனிக்கப்படுகிறதோ. அடியோடில்லை.

சாதாரணமாய்ப் புகைச் சுருட்டு பிடிப்பதால் தேகத்திற்குப் பல தீங்குகள் உண்டாகின்றனவென்றும் அதிலும் பாலியர் பிடிப்பதால் நாட்டிற்கே பெருங் கெடுதி யுண்டாகுமென்றும் சுதேச. வைத்தியர்களும் மேல்நாட்டு வைத்தியர்களும் தெளிவாய் நிரூபித்திருக்கிறார்கள்.



சுருட்டு பிடிப்பதால் க்ஷயம் முதலிய கொடிய வியாதிகள் உண்டாகுமென்பது ஒருபக்கமிருக்க முதலாவது அது இரத்தத்தை யசுத்தப்படுத்தி விஷமிக்கச்செய்து ஜீவாதாரமாகிய தாதுவை நீற்றுப்போகச் செய்கிறது. பாலிய வயதில் இக்கதியானால் இத்தகையோர்க் குற்பத்தியாகும் சந்ததிகள் சுத்த பலகீனர்களாய், நோயுடையாராகவே யிருப்பார்கள் என்பது திண்ணம். இது இப்போதே நிறுத்தப்படாவிட்டால் கடைசியில் நம் நாட்டில் ஜனிப்போரனைவரும் அத்தகையோராகவே யிருப்பார்கள்.

இப்போதே நம் நாட்டார்கள் தேகபலத்திலும் மனோபலத்திலும் குறைந்தவர்களாக விருக்கிறார்கள். முக்கியமாய் அதனாலேயே நாம் முன்னேற்றமடையாமல் அன்னியரால் மதிக்கப்படாமல் இருக்கிறோம். இப்போது பெரும்பாலான மாணவர்கள் பீடி, சிகரெட் பிடிப்பதைச் சாதாரண வழக்கமாய்க்கொண்டிருக்கிறார்கள். நாகரீகத்திற்கு அது ஒரு அவசியமான அங்கம் என்றே மதிக்கிறார்கள் என்று கூறலாம். மாணவர்மட்டுமல்ல மற்றைய சிறுவர்களும், கூலிவேலைசெய்யும் ஏழைப் பையன்கள் கூட பத்து வயதிற்கு முன்பே இதைப் பழகிக்கொள்கிறார்கள். இது எவ்வளவுதூரம் பழக்கத்திற்கு வந்துவிட்டதெனின், சிறுவர்கள் பெரியோர் முன் சலம் அருந்தும்போது எப்படி அச்சமின்றி அருந்துகிறார்களோ அதுபோலவே பகிரங்கமாய் வீதியில் சுருட்டு பிடித்துக்கொண்டு செல்கிறார்கள்.

அரசன் தன் குடிகளைப் பாதுகாப்பதில், அவர்கள் ஆசார ஒழுக்கங்களில் தவறாவண்ணம் பாதுகாக்கவேண்டியதும் ஒரு கடமையாகும். அன்னிய இராஜாங்கங்கள் சிலவற்றில் சிறுவர்கள் சுருட்டு பிடித்தால் பெற்றோர்க்கும், சிறுவர்க்குச் சுருட்டு விற்றவர்களுக்கும் அபராதம் விதிப்பதென்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நம் நாட்டில் அதிலும் இச் சென்னை மாகாணத்தில், நம் சந்ததியே க்ஷீணித்துப்போகச் செய்யும் இத்தகைய முக்கிய விஷயத்தைக் கவனிப்பாரேயில்லை.

இதைப்பற்றிய ஒரு ஆச்சரியமும் விசனிக்கத்தக்கதுமான ஒரு சமாசாரம் ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைக் கண்டோம். அதாவது சிறுவர்கள் சுருட்டு பிடிப்பதைத் தடுக்க ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று மந்திரிமார் சபையில் ஒரு பிரேரபனை கொண்டுவரப்பட்டதாம். அப்போது கல்வியிலாகா மந்திரியார்,

"சிறுவர்கள் சுருட்டுபிடிக்கும் வழக்கம் மிகக் கேட்டை விளைவிக்கக் கூடியதாயினும் அப்பழக்கம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. இன்னும் கொஞ்சகாலங் கழிந்தபின் அதைப்பற்றி ஒரு ஏற்பாடு செய்யலாகும்" என்றாராம்.

நேயர்களே இது எப்படி யிருக்கிறது? எத்தகைய அபூர்வமான மந்திராலோசனை! வீட்டில் தீப்பிடித்துக்கொண்டது என்றால் "அது இப்போதுதான் பிடித்தது. இன்னும் அதிகமாய்ப் பரவவில்லை. கொஞ்சகாலங்

கழிந்தபின் அணைக்கத் தொடங்கலாம்" என்பதுபோலவே யிருக்கிற தன்றோ !

வெள்ளம் வரும் முன் அணைபோடவேண்டுமென்பதும், விஷப் பூண்டை முளையிலேயே கிள்ளி யெறியவேண்டுமென்பதும் சாதாரண மதி யுடையோரும் அறிந்தவிஷயம். அவ்வாறிருக்கப் பின்வரும் விஷயத்தை முன்னுடியே யுணர்ந்து நடக்கவேண்டிய ஒரு மந்திரியார், பெருந் தீங்கை விளைவிக்கும், நம் சந்ததியாரின் ஆயுளையே க்ஷீணிக்கச்செய்யும் இத்தகைய கொடிய வழக்கத்தை இதுகாறும் தடுக்காதிருந்ததற்கே விசனிக்கவேண்டி யிருக்க, இம்மாதிரி கூறியதற்காக மிக்க விசனிக்கிறோம். நமது கெட்ட காலம் இன்னும் இருக்கிறதுபோலும்.

ஆண்டவன் நமக்குச் சக்தியளித்திருக்கும்போதுகூட நமக்கு நாமே நன்மை செய்துகொள்ளப் பின்னிடைந்தால் நாம் யாரை நொந்துகொள் வது. நமது மக்களின் கல்விதான் இகத்துக்கும் பரத்துக்கும் உதவாததா யிருக்கிறது. கல்வியினும் சிறந்த ஒழுக்கத்தையுமா அவர்களிழக்கும்படி செய்யவேண்டும். இந்த வயதில் அவர்கள் தீய வழியில் செல்வதைத் தடுக் காதிருப்பது நமது பெருங்குற்றமே யாகுமன்றோ.

பெரியாராகிய நமது மகான் காந்தியடிகள் அன்னிய நாடுகளில் கல்வி கற்கச் சென்றிருக்கும் நம் நாட்டு மாணவர்களுக்குச் சமீபகாலத்தில் புத்தி மதிக் கடிதம் எழுதியதில்—"Character is far more important than Culture"—"கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே மிக அதிகம் முக்கியமா னது" என்று கூறியிருக்கிறார். எல்லாம்வல்ல பரம்பொருள் நமது குறை யை யினியேனும் நீக்கி யருள்வாராக.

**பிரார்த்தனை.**

---

## நாலடியார் வசனம்

(137-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 9 - ம் அதிகாரம்.

**பிறர் மனை நயவாமை.**

**(பிறர் மனைவியை இச்சியாதிருத்தல்.)**

(பிறன் மனைவியை இச்சித்தலால் நேரிடும்) பயமோ பெரிது. அப் பயத்திற்குத் தக்க (இன்பமாவதுண்டோ வென்றால் அந்த) இன்பமோ சிறிய அளவினையுடையது. நித்தமும் ஆலோசிக்குமிடத்து இராஜதண்டனை யும் வரும். (மேலும்) நரகத்திற்கேதுவாகிய பாவமும் நித்தமும் பெருகிக் கொண்டே வரும். ஆதலால், நாணமுடையவர்கள் பிறர் மனைவியை நம்பி இச்சியாதிருப்பார்களாக. (1)

அன்னியனுடைய மனைவியை இச்சிப்பவர்களிடத்தில், தருமம், கீர்த்தி, புகழ், மேன்மை என்னு மிந்நான்கும் சேரமாட்டா. (அவைகளுக்குப் பதி



லாக) அவர்களிடத்தில், பகை, பழி, பாவம், அச்சம் என்னும் இந்நான்கு பொருள்களும் சேரும். (2)

பிறன் மனைவியை விரும்பி அவளிடத்திற்குப் போகும்பொழுதும் (யார் பார்ப்பார்களோ வென்று) பயம். திரும்பி வரும்பொழுதும் பயம். கூடி யின்பமனுபவிக்கும்பொழுதும் பயம். (விஷயத்தைப்) பிறர் அறியாம லிருக்கும்படி காத்தலில் பயம். (இவ்வாறு) எந்நாளும் பயத்தைக் கொடுக் கும். (ஆகையால்) சிறிதுமஞ்சாமல், பிறன் மனைவியை இச்சித்துப்போதல் யாது பயன் கருதியோ ? (3)

ஓ காமியே! (அன்னியன் தாரத்தைக் கூடும்போது மற்றவர்கள்) பார் த்துவிட்டால் குடிப்பழிப்பு நேரிடும். அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண் டால் (காலை உடைத்துவிடுவார்களாகலின்) கால் குறைந்துபோகும். (இத் தனை இக்கட்டுகளுக்கிடையில்) பெருமையில்லாத காரியத்தைச் செய்யும் பொழுதும் பயமுண்டாகும். நீண்ட நரகத்தில் மிக்க துன்பத்தை யுண் டாக்கும். (ஆகையால்) பிறன் மனையாளை இச்சித்து நீ கண்ட இன்பந்தான் எத்தன்மையது? எனக்குக் கூறு. (4)

நல்லொழுக்கம் சிறிதுமில்லாமல் இழிந்த தன்மையுடையவர்களாய், திரட்சியும் தேமலும் பொருந்திய தனங்களையுடைய மாதர்களின் தோள்க ளைத் தழுவுவதே தொழிலாய், முற்பிறப்பில் தம் வலிமையினால் பிறருடைய மனைவியிடத்தில் சென்றவர்களே, இப்பிறப்பில் பேடிகளாகப் பிறந்து கூத் தாடிப் பிழைப்பவர்கள். (5)

நல்லநாள் கேட்டு, பலரும் அறியும்படி மணப்பறை யறைந்து, விவாகம் பண்ணி (ஒருவனுடைய) பாதுகாப்பிற்குட்பட்ட மேன்மையான இயல்பினை யுடைய பிறனால் இச்சிக்கப்பட்ட மனைவியும், அவன் வீட்டிலிருக்க, அவ் வயலான் மனைவியை வேறொருவன் (தன் மனைவிபோ லெண்ணிப்) பார்த் தல் யாதுகாரணம் ? (6)

அயலார் புறங்கூறப் பயந்து, பந்துக்கள் வருந்த, அயலானுடைய மனை வியைத் தழுவி, (காம) மயக்கத்தையடைந்து, அவளையே நம்பியிருக்கும் நிலையில்லாத மனமுடையவனது அனுபவமானது, பாம்பின் தலையை நக்கி இன்பமடைந்தாற்போன்றது. (ஆபத்தேயன்றிச் சுகமில்லை யென்றபடி.)(7)

அறிவாளிகளிடத்தே தோன்றும் மிகவும் கொடிய காம நோயானது, அதிகரித்துப் பரவாது ; வெளிப்படாது ; பலராலும் அறியப்படாது ; அய லாரிடத்து மானத்திற்குப் பயந்து, யாதொன்றும் சொல்லாமல் உள்ளுக் குள்ளேயே ஆறிவிடும். (3)

(பகைவரால் விடப்படும்) பாணமும் அக்கினியும், பிரகாசிக்கும் கிர ணங்களையுடைய சூரியனும் வெப்பமுண்டாக்கிச் சுட்டாலும், மேலேசுடும். காமமானது, (அங்ஙனமின்றி வெம்பச்செய்து, மனத்தைக் கவலைப்படுத்திச் சுடுகின்றபடியால் அவைகளைவிட அதற்கே மிகவும் அஞ்சவேண்டும். (9)

ஊரில் தோன்றிய வெப்ப மிகுந்த சிவந்த நெருப்பிற்குத் தண்ணீரில் முழுகியாவது தப்பிவிடலாம். (ஆனால்) காமமோ, தண்ணீரில் குளித்தாலும் சுட்டுவிடும்; மலைமேலேறி ஒளித்தாலும் சுட்டுவிடும். (ஆகையால் அஃது உண்டாகாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.) (10)

## 10 - ம் அதிகாரம். ஈகை.

(தம் கையில் ஒன்றும்) இல்லாதகாலத்திலும், கூடியவரையில் இருக்கிற காலம்போலவே மிகவும் சந்தோஷமடைந்து நேர்மையுடன் கொடுக்கவேண்டுமென்னும் நற்குணமுடையவர்களுக்கு சொர்க்கவாசற் கதவுகள் மூடப்படமாட்டா. (1)

சாகுங்காலம் முன்னேயிருக்கிறது; (யாவரும்) வெறுக்கும்படியான விருத்தாப்பியமு மிருக்கிறது; அதன்பிறகும் பெருமையைக் கெடுக்கும் நோய்களிருக்கின்றன; (ஆகையால்) வீணை அலையாதேயுங்கள்; கையிற் பொருளுண்டானபொழுது அதனை உறுதியாகப் பிடித்திராதேயுங்கள்; (மற்றவர்களுக்குப்) பங்கிட்டு நீங்களும் உண்ணுங்கள்; ஒன்றையும் ஒளியாமல் கொடுங்கள். (2)

தரித்திரத்தால் சரீரம் நடுக்கமுற்றுத், தம்மை யடைந்தவர்களுடைய துன்பத்தைப் போக்காதவர்கள், (அப்படிச் செய்யாமல்) பிறருக்குக் கொடுத்துத் தாம் உண்டாலும், செல்வம் பெருகும் காலமானால் வந்துகொண்டேயிருக்கும். செலவிடாமல் உறுதியாகப் பிடித்துக்கொண் டிருந்தாலும் (முற்பிறப்பில் செய்த) நல்வினை நீங்கிவிட்டால், செல்வமும் நிலைத்திராமல் விட்டுப்போய்விடும். (3)

(மிகச் சிறிதாகிய) புல்லரிசியினளவாயினும், தினந்தோறும் உம்மால் கூடுமானவைகளைப் பிறர்க்குக் கொடுத்துச் சாப்பிடுங்கள். (ஏனெனில்) ஆழமான கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் (பிச்சையெடுத்துண்ணுதலால்) நெருப்பு மூட்டப்படுதலில்லாத அடுப்பையுடைய யாசகர்களை முற்பிறப்பில் கொடுக்காதவர்கள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். (ஆகையால்)

மறுபிறப்பின் பயனையும், இப்பிறப்பின் பயனையும் (நன்றாக) ஆராய்ந்து, வறியோர்க்குக் கொடுத்தலே ஒருவனுக்குப் பொருந்திய நல்வழியாம். தரித்திரத்தால் கொடுக்கமுடியாவிடினும், பிறரிடம் சென்று யாசியாதிருத்தல் கொடுப்பதைவிட இரட்டிப்பு மேன்மையுடையதாம். (5)

பலரும் விரும்பும்படி (கொடுத்து) வாழ்பவர்கள், ஊர் மத்தியில், சுற்றிலும் திண்ணையிட்டிருக்க அதன் நடுவிலிருக்கும் காய்ந்த பனைமரத்திற் கொப்பானவர்கள். தம் குடி செழிப்பாக இருந்தாலும், கொடுத்து உண்ணாத மனிதர்கள் சுடுகாட்டிலிருக்கும் ஆண் பனைக்கொப்பானவர்கள். (6)

புன்னைப் பூக்களின் வாசனையானது கயல்மீனையும் புலால்நாற்றத்தையும் போக்கும்படியான (அலைகள்) மோதுகின்ற குளிர்ந்த கடலையும், கரையையுமுடைய பாண்டியனே! பெய்யவேண்டிய மழை பெய்யாவிட்டாலும்,



உயர்ந்தோர் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாவிட்டாலும் உலகம் பிழைக்கும் வழியாது? (பெரியோர் கடமை கொடுத்துண்ணலாம் என்றபடி.) (7)

ஆற்றினால். நிறைந்த குளிர்ச்சிபொருந்திய கடலையும், கரையையுமுடைய பாண்டியனே! (தம்மிடம்வந்து) யாசிக்கின்ற கைக்கு இல்லையென்னாமல் ஏதாகிலுமொன்றைத் தம் சக்திக்கேற்றபடி கொடுப்பதே ஆண் தன்மையாகும். பதிலுக்குக் கொடுப்பவர்களுக்குக் கொடுப்பது, விளங்குகின்ற கடனெனும் பெயருடையதாகும். (8)

மிகவும் சிறிதென்று சொல்லாமலும் இல்லையென்னாமலும், தருமப் பயனை எல்லாரிடத்தும் செய்யக்கடவாய். (அது சிறிதாயினும்) வரிசையாக வாயில்கள்தோறும் சென்று பிச்சைவாங்கும் தவசியின் கையிலிருக்கும் பிக்ஷாபாத்திரம் (சிறுகச் சிறுக நிறைந்துவிடுவது) போல மெல்ல நிறைந்துவிடும். (9)

சிறு தடியைக்கொண்டு அடிக்கப்படுகின்ற விசாலமான வாயையுடைய பேரிகையின் சத்தத்தைக் காததூரத்திலுள்ளவர்கள் கேட்பார்கள். இடி இடிக்கும் சத்தத்தை ஒரு யோசனை தூரத்திலுள்ளவர்கள் கேட்பார்கள். (ஆனால்) பெரியோர்களுக்குக் கொடுத்தார் என்று சொல்லப்படும் சொல்லை, ஒன்றின்மேலொன்றாக அடுக்கியுள்ள சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்னும் மூன்று உலகத்தாரும் கேட்பார்கள். (தொடரும்.) (10)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
சித்தூர்.

## மாதர் நீதி மஞ்சரி

(151-ம் பக்கத் தொடர்ச்சி)

187464

### மாதர் கடமை.

துரைத்தனம் செய்வதைவிட குடித்தனம் செய்வது மகா கஷ்டம். ஆண்களுக்குரிய கடமையினும் பெண்களின் கடமையே இல்லற வொழுக்கத்தில் அதிகமாகும். எக்காரியத்தைச் செய்வோராயினும் தத்தம் கடமையை யுணர்ந்திருந்தாலன்றி, தாம் மேற்கொண்ட காரியத்தை இனிது முடிக்க ஏற்றவராகார். ஆகலின், மாதரது கடமைகளும் இன்னின்னவையென ஒருவாறு காட்டுவது பொருத்தமுடையதாகும்.

மாதர் என்று பொதுப்படக் கூறினும், பருவத்திற்கேற்றவாறு அவர்கள் பல பெயராலழைக்கப்படுவர். அவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பனவாம். இவற்றுள் ஐந்து முதல் ஏழளவும் பேதை, எட்டு முதல் பதினொன்றளவும் பெதும்பை, பன்னிரண்டு முதல் பதின்மூன்றளவும் மங்கை, பதினான்கு முதல் பத்தொன்பதளவும் மடந்தை, இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை, இருபத்தாறுமுதல் முப்பத்தொன்பதளவும் தெரிவை, முப்பத்திரண்டு

முதல் நாற்பதளவும் பேரிளம் பெண் என்று பெரியோர் கூறுவர். எனினும், ஈண்டு விவாகமாகாத கன்னிப்பருவத்தார், விவாகமானவர், மருமகளைப் பெற்ற மாமிகளாகும் பருவம் என முப்பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு பருவத்திலும் அவரவர் கடமை யின்னதெனக் கூறுவோம்.

கன்னிகைப் பருவமே மாதர்களின் வாழ்நாளாகிய வீட்டிற்கு அஸ்திபாரம். அஸ்திபாரம் நன்றாயிராவிட்டால் வீடு நில்லாததுபோல, பெண்கள் இப்பருவத்திலேயே நற்குண நற்செய்கைகளைக் கைக்கொள்ளப் பழகித் திருத்தமடையாவிட்டால், அவர்கள் ஆயுட்காலமுழுதும் துக்ககரமாகவே முடியும்.

இப்பருவத்தில் பெண்களின் உள்ளம் சிறு குழந்தைகளின் உள்ளம் போல நிர்மலமா யிருத்தல்வேண்டும். பொறாமை, வஞ்சனை முதலிய தீய குணங்களுக்கு அவர்கள் மனத்திற் சிறிதும் இடமிருத்தலாகாது. திரவிய சம்பாத்தியத்தினிமித்தம் உத்தியோக சாலைகளுக்குச் சென்று தொழில் புரியவிரும்புவோர் அதற்கேற்ற கல்வியைச் செவ்வனே கற்றபின்னரே, அத்தொழிலிற் பிரவேசிக்க முடியும். அதுபோலவே, பெண்களும் விவாகம் செய்துகொண்டபிறகு, தங்கள் நாயகர் வீட்டிற்சென்று, இல்லற நெறிக்குரிய காரியங்களை நன்கு நடத்துதற்கு வேண்டிய அறிவைத் தெரிந்துகொள்ளத்தகுந்தது இப்பருவமே. ஆகலின், பெண்கள் இப்பருவத்திலேதானே வீட்டைச் சுத்தஞ் செய்தல், பாத்திரங்களைக் கழுவுதல், சிறுகச் சிறுக சமயல் வேலைகளைத் தாய்மாருடனிருந்து கற்றல், தையல் முதலிய வீட்டுக் காரியங்களைச் செய்தல் ஆகிய இவற்றைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். செய்வதைச் சீராகச் செய்யப் பழகுதல் முக்கியம். 'அவசரக் கோலமென்று அள்ளித் தெளிக்கலாகாது'. ஒழிந்த நேரங்களில் கற்புடைய பெண்களின் சரித்திரங்களைப் படித்து, அவர்களின் விசேஷங்களைத் தெரிந்துகொண்டு, 'நாமும் அப்படி நடக்கவேண்டு'மென்று தினந்தோறும் அவற்றை அனுஷ்டானத்திற் கொண்டுவரவேண்டும். அல்லியரசாணிமாலை, புலந்திரன் களவு முதலியவற்றை வாசிப்பது நிஷ்பிரயோஜனமாகும். நாணம் முதலிய குணங்களை யுடையவர்களாய், அடக்கமுடன், இருக்குமிடம் தெரியாமல் மெல்லப் பேசுவதும் மெல்ல நடப்பதும் பெண்களுக்கழகாகும். எவ்வளவு வேலை செய்தாலும், உடை, கை, கால், முகம் முதலிய அவயவங்கள் சுத்தமாயிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். 'நானும் மிக்க வேலை செய்கிறே'னென்று வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல, பூமியதிர நடந்து, சட்டியைத் தூக்கிப் பானையின்பேரிலும் பானையைத் தூக்கி சட்டியின்பேரிலும் போட்டுத் தூளாக்கி, 'அல்லா பண்டிகைக்கு ஜலாலி புலாலி வேஷம் போடுவதுபோல,' முகத்திலும் ஆடையிலும் அடுப்புக் கரியைப் பூசிக்கொண்டு, விகாரஞ் செய்துகொள்ளாமல் நிதானமாயும் சுத்தமாயும் வீட்டு வேலைகளைச் செய்தல் சிறப்பாகும்.



ஆனால் அச்சிறுமிகளது ஒழுக்கத்திற்குப் பெற்றோரே பெரும் பொறுப்பாளிகளாவர். அவர்களே தக்க உத்தரவாதிகள். பெண்கள் விஷயத்தில் தந்தைமாரினும் தாய்மாரே கண்காணிகளாவார். சொல்லித் திருத்துவது மாத்திரம் போதாது. முன்மாதிரிகளா யிருக்கிற பெற்றோர் ஒழுகிக் காட்டவேண்டும். இன்றேல், புதிய ஆடையில் எந்தச் சாயமும் கெட்டியாகப் பிடிப்பதுபோல, எப்படி வளைத்தாலும் வளைக்கக்கூடிய இளமைப் பருவத்தில், பெண்கள் கெட்ட விஷயத்தை மனத்திற் கொண்டுவிட்டால், பின்பு அதைப் போக்குவது இயலாதகாரியம். 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டுமன்றோ'? இதுபற்றியே, 'தாயைப்போல பெண், நூலைப்போல சீலை'', 'தாயைப்பார்த்து பெண்ணைக்கொள்' என்னும் பழமொழிகள் வழங்குவனவாயின. பல தாய்மார், தம் பெண்களைச் செல்வமாய் வளர்ப்பதாகப் பாவித்து, எந்த வேலையும் செய்யவிடாமல், ஒன்றுக்கும் உதவாதவளாகும்படி செய்துவிடுகின்றனர். ஆண்பிள்ளைகள் படிப்புவிஷயத்தில் எவ்வளவு கவனிக்கப்படுகின்றார்களோ, அப்படியே பெண்களும் கல்வி வீட்டுவேலை, இவ்விரண்டு விஷயத்திலும் கவனிக்கப்படவேண்டுமென்பதை நினையாமல், தம் பெண்களை இவ்வாறு வளர்ப்பது, "என் பிள்ளைக்கு என்ன குறைவு? இருக்கிற சொத்தை வைத்துக்கொண்டு குந்தித் தின்றாலும் மூன்று தலைமுறைக்காகுமே. அவனுக்குப் படிப்பேன்? படித்து ஒருவனிடம் சென்று கைகட்டிக்கொண்டு உத்தியோகம் செய்யவேண்டுமோ?" என்று ஆண் பிள்ளையைப் பள்ளிக்கனுப்பாமல் மூடனாக வளர்த்தலை யொக்கும். பெண்கள் வேலை செய்யவேண்டியது, அதைக் கற்றுக்கொள்வதற்காகமாத்திரமல்ல. ஆண்பிள்ளைகளைப்போல, ஓடியாடித்திரிய இயலாதவர்களாகிய பெண்களுக்குச் சிறந்த தேகப்பயிற்சியுமாகும். தங்கள் பெண்களை 'வேலை செய்யக்கூடிய இடங்களில் கொடாமல் வேலைக்காரர்களை வைத்துக்கொண்டிருக்கும் வீடாகப் பார்த்து மணஞ் செய்துகொடுப்போம்' என்னும் சில பணக்காரத் தாய்மார்கள், இவ்வாறு எண்ணி, சிறுவயதில் அப்பெண்களை வேலை செய்யவிடாமல் வளர்த்து, அத்தகைய வீடுகளிலே கொடுக்கிறார்கள். அவர்களும் அதன்படியே போனவிடத்தில் யாதொரு வேலையும் செய்யாமல் உண்பதும் உறங்குவதுமாக காலங்கழிக்கிறார்கள். இதுதான் சுகமெனக் கருதுகிறார்கள். அந்தோ! அவர்கள், மருந்தும் கையுமாயும், பாயும் படுக்கையாயும் இருப்பதற்கு இதுவே காரணமென்பதை யறிவதில்லை. வேலை செய்தால்தான் கைகால் முதலிய உறுப்புகளெல்லாம் உரம்பெற்று தேகாரோக்கியமுண்டாகும். உழைப்பு என்பதைப்பற்றி காலஞ்சென்ற ஸ்ரீமான்-திருமணம் செல்வகேசவராய முதலியாரவர்கள் சுகாதார தருப்பணம் என்னும் வியாசத்தில் எழுதியிருப்பதிலிருந்து ஒரு பாகத்தை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

உழைப்பு :—'எடுத்தாளாத பொருள் உதவாது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. உழவு, கைத்தொழில் முதலியவற்றைச் செய்வோர் உடலுரம்பெற்று நோயின்றி, பலாட்

டியராக நீடிய ஆயுள் பெற்றிருக்க, யாதொன்றுஞ் செய்யாமல் சோறுண்டு சோம்பியிருப்பவர், தேகபலமின்றி மெலிந்திருப்பதும், அடிக்கடி வைத்தியரைத் தேடித் திரிவதே உத்தியோகமாக இருப்பதும் பிரத்தியக்ஷம். *** சரீரப்பிரயாசை கொள்ளாவிடின் அவர்கள் அஜீர்ணம், காய்ச்சல், கைகால் பிடிப்பு, ஸ்தூலம், பாரிசவாய்வு, துர்ப்பலம் முதலியவற்றால் பீடிக்கப்பெறுவர். இவர்களுக்கு ஔஷதங்கள் தற்கால பரிகாரமேயன்றி வேறாகா. இவர்களுக்கு உழைப்பே பரமௌஷதம். இந்தப் பரமௌஷதங்கொள்ளாவிடின், இந்த ரோகங்கள் கஷ்ட சாத்தியமும் அசாத்தியமுமான ரோகங்களாகிவிடும். தங்கள் இருப்பிற்கும் வயதுக்கும் தேக இயற்கைக்கும் எற்றபடி உழைப்புக்கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் செய்வது ஏனையரினும் நகரவாசிகளானவர்க்குப் பின்னும் அவசியம்.

ஆகையால் குடும்பகாரியங்களைப் பெண்கள் செய்வது அவர்களுக்கு நன்மையேதரும் என்பதையும், தங்கள் செல்வ வளர்ப்பு அவர்களுக்குத் தீமையே உண்டாக்கும் என்பதையும் தாய்மார்கள் கவனிக்கவேண்டும். விடியற்காலையிலெழுந்து, சாணந்தெளித்தல் முதலிய வேலைகளைச் செய்வதால் உண்டாகும் நன்மைகளைத் தக்க வைத்தியர்களிடம் கேட்டால் சொல்வார்கள். யாரைப்பார்த்து இவர்கள் 'இதுவே நாகரீகம், வேலை செய்வது அநாகரீகம்' என்று அறிந்தார்களோ, அந்த மேல்நாட்டாரைக் கேட்டால் இது தப்பிதமென்பதை அவர்களே சொல்லிவிட்டுப் போவார்கள். 'ஜப்பானில் தோட்டவேலை முதல் சகல வேலைகளையும் வீட்டு எஜமாட்டிகளே செய்வார்கள்' என்பது, அவர்கள் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் விளங்கும். தவிர, இன்னொரு விஷயமும் அத்தாய்மார்கள் கவனிக்கவேண்டும். அதாவது, வேலையாட்கள் எவ்வளவு நம்பிக்கைக்குரியவராயினும், திறமையுள்ளவராயினும் மேல்பார்க்க ஒருவர் இருந்தேயாகவேண்டுமன்றோ? வேலைவாங்கும் எஜமானர் வேலை தெரியாதவராய், 'தங்கள் கையையே எதிர்பார்க்கிறவர்கள்' என்று தெரிந்தால் அவர்கள் வேலையைச் செய்யமாட்டார்கள்; மேலும், அவர்கள் தங்கள் வருமானத்திலேயே நாட்டமுடையவர்கள். 'வேலை முடிந்தது' என்னுமளவில்தான் பொறுப்பாளிகள். ஆகலின், நமது இன்ப துன்பங்களையும் லாப நஷ்டங்களையும் கவனித்து அவற்றிற்கேற்ப நடந்துகொள்ளவேண்டுமென்ற கர்மசிரத்தை அவர்களுக்கொன்றுமில்லை. அதனால் அக்குடும்பம் நாளடைவில் சீர்கெட்டுப்போகும். (தொடரும்.)

**பூ. ஸ்ரீநிவாசன்**, தமிழ்ப்பண்டிதர்,
சித்தூர்.

---

# அன்பு !

சகோதர சகோதரிகளே! 'அன்பு' என்ற இவ்விஷயம் மிகப் பெரியது. இதைப்பற்றிப் பல பெரியார்கள் பலவாறு கூறுகிறார்கள். அவற்றையெல்லாங் கூறி யுமக்கு விளங்கவைக்கும் ஆற்றல் எமக்கில்லை. ஆனால்,



"இதை யடைந்தவர்களை இப்படர்ந்த உலகம் போற்றுகிறது. அடைதற்கரிய பெரும்பேறுகளையடைய இதுவன்றி வேறு வழியில்லை. நீங்களும் இத்தகைய அரும்பெரும் வல்லமையையுடைய பூரண அன்பை யடையவேண்டிய தவசியம்" என்பதைமட்டுமே நாம் கூறுகிறோம்.

இதையடைவதற்கு நீண்டநாள் தவஞ்செய்யவேண்டியதில்லை! காய் கனிகளைப் புசித்து வனங்களில் திரியவேண்டியதில்லை! விலைகொடுத்து வாங்கவேண்டியதுமில்லை! தேகப்பிரயாசையுமில்லை! இலவசமாகவே எளிதிற் பெறலாகும். அது நாம் கூப்பிடுவதைக் கேட்டு, வந்து சேரவேண்டிய அவ்வளவு தூரத்திலுமில்லை. நீ நினைத்தபொழுதே உன் குறிப்பறிந்து தோன்றும் இயல்பையுடைய ஒரு ஏவலாளனைப்போல உன் அருகிலேயே காத்துக்கொண்டிருக்கிறது. நீ செல்லுமிடமெல்லாம் உன் நிழல்போலப் பின் தொடர்ந்தே வருகிறது. சிற்சில சமயங்களில் நீ அதை நினையாமற் செய்துவிடுகிற இரண்டொரு செய்கைகளைப்பற்றி அது தன்னைத் தானே நொந்துகொள்கிறது.

இத்தகைய இலகுவில், அதுவும் இலவசத்தில், நினைத்த பொழுதிலேயே கிடைக்கவிருக்கும் ஓர் மகத்தான சக்தியை நீ வேண்டாமென்று கூற விரும்புகிறாயா? அந்தோ! இதையடையாதவர்களைப் பெரியோர்கள் மனிதவகுப்பிற் சேர்ப்பதில்லையே! கேவலம் மனித வுருவைப்பெற்ற ஓர்வித **விலங்கா**கவே கருதுகிறார்கள். ஏனெனில், 'இவ்வளவு இலகுவாய்ப் பெறவிருக்கும் பாக்கியத்தை யடைய முயற்சியாதிருக்கும் ஒருவன், இவ்வுலகில் எந்தக் காரியத்தைச் சாதித்துவிடப்போகிறான்' என்பதே அவர்களின் எண்ணமாகும்.

ஆதலால் நேயர்களே! வாழ்நாளை விருதாவிற் கழிக்காதீர். உலகத்திலேயே மிகச் சிறந்ததொன்றாகிய அன்பைப் பெற விரும்புங்கள். உம்மால் முதன்மையாகச் செய்யப்படும் முயற்சி அதற்காகவே யிருக்கட்டும். அதனாலடைகிற பெரும்பயனை இரண்டொரு தினத்திலேயே நன்கறியலாகுமாதலினால், இன்றே பிரயாசைப்படுங்கள்! இனிக் கூறுபவைகளைக் கதையைப் போல வாசித்து மறந்துவிடாதீர்கள். **ஆழ்ந்த கவனிப்பு மிக்க அவசியம்.**

'அன்பு' என்பது அடி, நுனி, இடை, வெளி யென்பதின்றி ஏகவுருவாய்ப் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கிடப்பதேயாகும். எனினும், ஓர் வகையில் அது அடர்ந்து, படர்ந்து, செழித்துவளர்ந்த பல்வேறு கிளைகளையுடைய ஓர் சிறந்த விருக்ஷம் போன்றது. 'பல்வேறு கிளைகள்' என்றால், அது எது? வென்று அறிய விரும்புவர்கள். ஆதலால், நாமும் விரிவஞ்சி மிகச் சுருக்கமாகவே ஒவ்வொரு கிளைகளைப்பற்றியும் கூற விரும்புகிறோம்.

இரக்கம்! இது தரித்திரர்களாகிய ஏழைகளிடத்துச் செலுத்தும் அன்பிற்குப் பெயர். நம்மாலியன்றவரையில் அவர்களின் பசிப்பிணியைத் தீர்க்கவேண்டும். இதைப்பற்றி ஒரு மகான் 'ஒருவர் பசி யென்று வருகையில்

புசிக்கப் பொறுக்கமாட்டேன். மற்றதெல்லாம் பொறுப்பேன் இவ்வையகத்தில்' என்று கூறியுள்ளார்.

**கருணை!** இது சரீரபலம், அறிவு பலமாகிய வலிமையற்றவர்களிடத்து செலுத்தும் அன்பிற்குப் பெயராகும். அத்தகையோர்க்கு நாம் கூடுமான வரையில் உதவிகளைச்செய்ய மறவாதிருக்கவேண்டும். இவற்றை நமது புண்ணிய பூமியில் தோன்றி மறைந்த நம் முன்னோர்கள் பல வழிகளிலும் நடந்து காட்டினார்கள்.

**காருண்யம்!** இது எறும்பினுஞ்சிறிய ஜந்துக்கள், யானையினும் பெரிய பிராணிகள் வரை ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன வாகிய சகல உயிர்களிடத்தும் காட்டுகின்ற அன்பின் பெயராகும். அவைகளின் உயிர்களை நமது உயிராகப் பாவித்து நடத்துவதே காருண்யம். இதை நமது சிபிச்சக்ரவர்த்தி இவ்வுலகிற்குத் தமது செய்கையாலேயே காண்பித்தார்கள். இதற்குச் **சீவகாருண்யம்** என்றும் பெயர்.

**பந்துத்துவம்!** இது உறவினர்களிடத்து செல்வர், வறியர் என்ற வேற்றுமையில்லாமற் செலுத்தும் அன்பின் பெயராகும். அவர்கள் உறவினர்களேயாயினும், உடன்பிறந்தோராகக் கருதி அவர்களின் முகங்கோணாதபடி நடந்துகொள்ளவேண்டும். இவ் 'விருந்தோம்பல்', 'சுற்றந்தழுவல்' முதலியவைகளை மற்றெந்த நாடுகளையும் விட நமது நாட்டிலேயே மிகச் சிறப்பாகக் காணலாகும்.

**பட்சம்!** இது 'எஜமான்' என்ற நிலைமையிலிருப்பவன், தன் வேலையாட்களிடத்திற் காட்டுகின்ற அன்பிற்குப் பெயராகும். வேலையாளேயாயினும், அவன் தன்னைப்போன்ற ஒரு மனிதனே யெனக் கருதி நடந்தொழுக வேண்டும். இதை நமது ஆதனூர் வேதியர், நந்தனாரிடத்திற் காட்டாமற் போனதுபற்றி இறுதியில் பெரிதும் வருந்தினர்.

**பாசம்!** இது தாய் தன் குழந்தையினிடத்தும் குழந்தை தன் தாயினிடத்தும் செலுத்துகின்ற அன்பின் பெயர். உடல் இரண்டாயினும், உயிர் ஒன்றாகவே பாவித்து நடத்துவதாகும். இது மிக்க பிணிப்புடைய அன்பு-மனதைக்கவர்ந்து நீங்காதது. இவற்றை ஸ்ரீராமரும் கௌசலையும் நடந்துகொண்ட சரித்திரத்தால் நன்கறியலாம்.

**நேசம்!** இது தம்மை யொத்த நண்பர்களிடத்திற் செலுத்துகின்ற அன்பின் பெயராகும். இது வயது, வலிமை, செல்வம், அந்தஸ்து முதலியவைகளில் ஏற்றத்தாழ்விருப்பினும், சிறிதும் கருதாது அவர்களுடைய சுகம், துக்கம் முதலியவைகளைச் சமமாகவே அனுபவித்தலாகும். இதை ஸ்ரீ கிருஷ்ணபகவான், குசேலரிடத்தில் நடந்துகொண்ட நிலைமை தெளிவாய்ப் புலப்படுத்தும்.

**விசுவாசம்!** இது ஊழியஞ் செய்பவன் தன் எஜமானனிடத்திற் காட்டுகின்ற அன்பின் பெயர். எஜமானன் தான் செய்த வேலைக்குத்தானே கூலி கொடுத்தான் என்று அலட்சியமாய்க் கருதிவிடாமல், தனக்கு அன்னமளித்துதவும் தந்தையாகப் பாவித்து உண்மையோடு நடந்துகொள்ள வேண்டும். எவ்வளவுதான் அடித்தாலும் உடனே மறந்து, 'தனக்கு சோறு போடுகிறான்' என்ற ஒரே எண்ணத்தைக்கொண்டு சந்தோஷத்தோடு பணிந்து நடக்கும் நாயானது, இவ்விஷயத்தில் மனிதனுக்குப் பின்னடைவதில்லை.



**அபிமானம்!** இது சொந்த தேசத்தினிடத்தும், தாய்மொழியினிடத்தும், பிறப்புரிமைபெற்ற மதத்தினிடத்தும் செலுத்துகின்ற அன்பின் பெயராகும். இவை முறையே 'தேசாபிமானம்' 'பாஷாபிமானம்' 'மதாபிமானம்' என்று கூறப்படும். மனிதத்தன்மையை உள்ளபடியே யடைந்தவர்களிடத்திலும் இவைகளைக் காணலாம். இவைகளை யுடையவர்களாயிராதவர்கள் ஒருபோதும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே கருதப்படமாட்டார்கள்.

**காதல்!** இது புருடன் தன் மனைவியினிடத்தும் மனைவி தன் புருடனிடத்தும் செலுத்துகின்ற அன்பிற்குப் பெயர். இது உள்ளபடியே மிகப் பரிசுத்தமானதும், தங்களையும் மறந்து பிணைக்கப்படுவதுமாகிய ஓர் தெய்வீக சக்தியேயாகும். இதை நளன், தமயந்தி முதலியவர்கள் நமக்கு அனுபவமாய்க் காட்டியுள்ளார்கள். இக்காதல் மிகப் பரிசுத்தமானதே. இது பிரஜாவிர்த்தியின்பொருட்டு பகவானால் அமைக்கப்பட்ட ஒருவித அதிசய சக்தியேயெனத் தகும். ஆனால் இதை வரம்புகடந்து செல்லும்படிவிட்டால் இதைவிடக் கெடுதி வேறில்லை. இது பிறவியைவளர்க்கும் பெரு மருந்தாகும். அதனாலே ஞானிகள் இதை அறவே வெறுக்கிறார்கள். தீயினும் கொடிதென அஞ்சுகிறார்கள்.

**பக்தி!** எல்லாம்வல்ல இறைவனிடத்திற் செலுத்துகின்ற அன்பிற்கே பக்தி யென்று பெயர்! பூரண விசுவாசமும் வணக்கமும் சேர்ந்ததே பக்தி. இதைத் தூய்மையான நீரில், அமுதம்போன்ற பாலானது இடைவிடாது சொட்டுசொட்டென வந்து விழப்பண்ணும் ஓர்வித செய்கைக்கே ஒப்பிடலாம். போதுமான பால் விழப்பெற்றதும், பாலும் நீரும் பிரிவின்றி ஒன்றாய்த் தோன்றுவதுபோல பக்தனும், இறைவனும் **அன்பின் வசத்தால் பிணைக்கப்பெற்று** வேறு பிரித்தறிய முடியாதபடி ஒன்றாய்க்கலந்து தோன்றுவார்கள். இந்த நிலைமைக்கே பெரியோர்கள் "அன்பே சிவமாவதியாரு மறிந்தபின் அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே" என வேதத்தின் முடிவான பொருளை மிகச் சுலபமாய்த் தெளிவாய்க் கூறியுள்ளார்கள்.

இவைதான் 'அன்பின் கிளைகள்' என்று கூறியது. ஒருவன் தன் மனைவியையும், குழந்தையையும் முத்தமிடுவது ஒரேவித செய்கையே யெனினும் முந்திய செய்கைக்குக் 'காதல்' என்றும், பிந்திய செய்கைக்குப் 'பாசம்' என்றும் பொருள்படுவதுபோல, இவையாவும் அன்பின் நிகழ்ச்சியே யெனினும், **மனம் வேறுபாடடைதலினாலேயே இப்பெயர்கள் இடப்பெற்றன வெனக் கருதலாம்.**

இவ்வுலகம் ஒரு விதத்தில் கண்ணாடிபோலப் பிரதி பிம்பிக்கிறது. நீ கண்ணாடியினிடத்து நெருங்கினால் உன்னைப்போன்ற மற்றொரு உருவத்தைக் காண்பாய். நீ கையை உயர்த்தினாலும், சிரித்தாலும் அவ்வுருவமும் அப்படியே செய்வதுபோல இவ்வுலகமும் நம்மில் உள்ளதையே திரும்பக் காட்டும். எல்லோரும் உன்னிடத்தில் மரியாதையாய்ப் பேசவேண்டுமானால் நீ எல்லாரிடமும் மரியாதையாய்ப் பேசு. மற்றவர்கள் உன்னைக் கனப்படுத்த வேண்டுமானால், நீ மற்றவர்களைக் கனப்படுத்து. உன் சுகத்தைப் பிறர் கவனிக்கவேண்டுமானால் நீ பிறர் சுகத்தைக் கவனி. உன்னை 'மூடன்' என்று எல்லோரும் கூறவேண்டுமானால், நீ எல்லோரையும் 'மூடர்கள்' என்று கூறு. நீ எதைக் கொடுக்கிறாயோ அதையே பெறுகிறாய். **அடி வேண்டுமானால், வழியிற் போகும் ஒருவனை அடி. அன்பு வேண்டுமானால், அன்பாயிரு!** இது வெளிப்படையான உலக அனுபவம்.

'அன்பு' இல்லாதவர்கள் எல்லாப் பொருள்களும் தமக்கேயுரியவை என்று கூறுவார்கள்; அன்பையுடையவர்களோ தமது எலும்புகூட பிறர்க்கு உரியது என்று செய்கையிற் காட்டுவார்கள்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"—என்றருளினார் நாயனார்.

ததீசி மகாமுனிவர், விருத்திராசுரன் முதலிய அசுரர்களைக் கொல்ல வச்சிராயுதம் செய்துகொள்வதற்காகத் தம்மைக் கேட்ட இந்திரனுக்குத் தமது முதுகெலும்பைக் கொடுத்துவிட்டார்.

அன்பில்லாதவன் எலும்பையுஞ் சதையையுந் தோலாற் போர்த்திக்கொண்ட **ஒரு மனித வுருவமாகமட்டுமே**(இறவாதிருந்தும் இறந்தவனாகவே) காணப்படுகிறான். ஆதலால், நீ மக்கட்பிறவி யெடுத்ததின் பயனை யடைய வேண்டுமானால், மக்களின் வகுப்பில் நீயும் ஒருவனாக விளங்கவேண்டுமானால் **நிறைந்த அன்பை யுடையவனாயிரு!**

அன்பெனும் பிடியில் அகப்படும் அன்புருவாயமைந்த பரசிவத்தை, நமக்கு அருமையான அன்பை சுலபமான வழியில் நாம் பெறும் பாக்கியத்தைக் கொடுத்தருள் புரியுமாறு பிரார்த்திப்போமாக!

**கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை,**
54, தஞ்சாவூர் ரோட், திருச்சிராப்பள்ளி.

**குறிப்பு**:—இந்த விஷயம் யாவரும் கவனத்தோடு வாசித்தற்குரியது. அன்பு என்பது சீவர்களிடத்து கனிவினால் எழும் ஒருவித மன நிகழ்ச்சியாகும். பிற சீவனுடைய துயரைக்கண்டு சகியாததே யிதன் பெருந்தன்மையான சுபாவமாகும். இந்த அன்பு ஆன்மாவினிடத்தே அதன் சொரூபமாகவே அமைந்துள்ளது. அவித்தை யல்லது அகங்காரத்தால் சீவன் இராகத்துவேஷாதிகளோடு சம்பந்தப்பட்டு பரிசுத்தமான அன்பை மறந்து கர்மங்களில் இடர்ப்படுகிறான். தன் இயற்கையாகிய அன்புருவை யடைந்தவனே சிவத்தையடைந்து நித்தியானந்த நிலை யெய்துவன். எப்படியெனில் அன்பே சிவமாதலின் என்க. ஆதலின் இந்த அன்பைப் பூரணமாய்ப் பெற்றோர் அழியாத முத்திப்பேறடைவர் என்பதையுணர்ந்து ஒவ்வொருவரும் அன்புமயமாக முயலவேண்டும்.



**பத்திரிகாசிரியர்.**

---

## ஆரிய சித்தாந்தம்.

### (கர்மவிபாகம்.)

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் கூறிவந்த பலவகையான சற்கருமங்களினாலும் எய்தும் பயன் முத்தி என்னப்படும். முத்தி, மோக்ஷம் என்பன ஒருபொருட்கிளவிகள். இதனைத் தமிழில் வீடு என்று நூல்கள் கூறும். ஆகவே முத்தி, மோட்சம், வீடு என்பன ஒரே பொருளையே கூறும். "வீடு" என்பது விடு என்னும் வினைப்பகுதியடியாகப்பிறந்த முதல்நிலைதிரிந்த தொழிற்பெயராய் விடுபடுதல் என்னும் பொருள் தரும். முத்தி, மோட்சம் என்பனவற்றிற்கும் இதுவேபொருளாம். விடுபடுதல் என்றால் எதில் நின்றும் விடுபடுதல் என்னில் நரை, திரை, மூப்பு, ஜனனம், மரணம், ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், பசி, நோய் முதலிய பிரபஞ்ச சம்பந்தமான துன்பங்களினின்றும் விடுபடுதலாம். இவை யெல்லாம் கர்மவிபாகத்தால் வருவன. பாபபுண்ணியங்களுக்குப் பொதுவான கர்மமென்னும் சொல் ஈண்டு பாபத்தையே குறிக்கும். அதன் விபாகமாவது அக்கன்மமானது தனது பலனைக் கொடுக்கும் தசையாகும். அது ஜன்மம், ஆயுள், போகமென்று மூவகைப்படும் என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஒருவன் செய்த பாபகன்மமானது முற்கூறிய ஞானயோகாக்கினியால் தகிக்கப்படாத பட்சத்தில் அது ஜன்மம், ஆயுசு, போகம் என்னும் பலன்களை அளிக்கின்றது. ஜன்மம் புழுவாதி யிழிந்த ஜன்மத்தைத் தருதல்; ஆயுள் என்பது அற்பாயுசாகச் செய்தல்; போகம் என்பது எமலோகத்தில் நரகவாதனையைச் செய்தல்.

இப்பாபகன்மம் மனம், வாக்கு, காயம் என்கிற திரிகரணங்களாலும் செய்யப்படுகின்றது. அது அற்பமானதாயிருந்தாலும் அவன் எமலோகத்தில் அதிக கோரமான நரகவாதனையை அனுபவிக்கிறானென்று பிரமபுராணம் கூறுகின்றது. பாபம் செய்தவன் ரிஷிகள் விதித்திருக்கிற பிராயச்சித்தங்களைச் செய்துகொள்ளவேண்டும். செய்துகொண்டால் அதனின்றும் விடுபடுவான். இல்லாவிடில் நரகவாதனையை அடைவானென்று விஷ்ணு புராணம் கூறுகின்றது. பிராயச்சித்தம் செய்துகொள்ளாதவனும், இராஜ தண்டனையால் பாபம் நீங்கப் பெறாதவனும் நரகங்களை அனுபவித்துப் பின்பு பலவகையான இழிந்த ஜன்மங்களை யடைவானென்று விஷ்ணு தர்மோத்தரம் கூறுகின்றது. இதனால் சரியான இராஜதண்டனையும் பாபத்துக்குப் பிராயச்சித்தமாமென்று விளங்குகின்றது

மூவகையான கர்மவிபாகங்களில் பிறர்பொருளை யிச்சித்தல், பிறருக்குத் துன்பம் உண்டாக்கக் கருதல், வீணான எண்ணங்களைக் கொள்ளுதல் இவை போல்வனவெல்லாம் மனதினால் செய்யப்படும் பாவங்களாம். பௌருஷம் பேசுதல், பொய்சொல்லுதல், கோள் சொல்லுதல், தன் மனதுக்குத் தோன்றினபடியே பேசுதல், சிநேகிதர்களுக்குள் பகையுண்டாகும்படி பேசுதல், இவைபோல்வன வாக்கினால் உண்டாகும் தோஷங்களாம். பிறனுக்குத் தெரியாமல் அவன் பொருளை யெடுத்துக்கொள்ளுதல் (திருடுதல்), பிறரை அடித்தல், இம்சித்தல், பரதாரகமனம் செய்தல் முதலியவைகள் சரீரத்தினால் செய்யப்படும் பாவங்களாம். இவைகள் மிகுதியும் பெரிதாயின் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் தீமைபயக்கும். கொஞ்சம் குறைவுள்ளதாயின் பரலோகத்தில் துன்பம் அளிக்கும். இப்பாவங்கள் ஓர் அழுக்காய்த் தோல், நரம்பு, எலும்பு முதலியவற்றில் நின்று சூட்சும சரீரத்திலும் பிரவேசித்துவிடும். அதனால் இந்தத் தூலசரீரத்தினால் அனுபவித்தது போக எஞ்சியிருந்தது சூட்சும சரீரத்தைப்பற்றி வேறு சரீரங்களுக்கு காரணமாக வருமாதலால் இகலோக பரலோகங்க ளிரண்டிலும் துன்பத்தையே பயக்கும்.

இவற்றை ஒழித்துக்கொள்வதற்காக யாம் கூறிவந்த நித்தியவிதியாதி கர்மங்கள் ரிஷிகளால் விதிக்கப்பட்டன. இவற்றுள் ஸ்நானம், ஜபம், தியானம், தேவாராதனை, ஆலயதரிசனை, தேவபிதிர்தர்ப்பணம் முக்கியமானவைகள். இவைகளுக்குள் சரியை கிரியையாதிகள் அடங்கி நிற்கின்றன. யோகஞானங்களும் விளக்கப்பட்டன. சரியை கிரியைகளைவிட யோகம் சிறந்தது. யோகத்தைவிட ஞானம் சிறந்தது. ஆதலால் மோட்சத்துக்குச் சோபானமாம் (படிகள்) இந்த முறையை ஒவ்வொன்றாய் அனுஷ்டித்து வந்து ஞானமாகிய படியில் ஏறினால் அது அழிவற்ற ஞானமாகும். இந்த ஞானத்தினால் அடையப்படுவதே முத்தியென்பது.

முத்தியென்பது இன்னதென்பதை எளிதில் கண்டறிய முடியாது. ஏனெனில் உலகத்தில் பலவிதங்களான மதங்கள் உள. அவைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகக் கூறும். அதனால் உண்மை காண்பதரிது. சமயமோ ஈசுவர சமயம் நிரீசுவர சமயமென இருவகைப்படும். ஈசுவர சமயம் ஆஸ்திகம் என்னப்படும். நிரீசுவர சமயம் நாஸ்திகம் என்னப்படும். ஆஸ்திக சமயமே உலகில் பெரும்பாலாரால் அனுஷ்டிக்கப்படும். ஆஸ்திக மதத்துக்கு வேதாகம புராண ஸ்மிருதிகளே பிரமாணங்களாம். வேதபுராண ஸ்மிருதிகளை அனுசரித்த மதங்கள் வைதிகமென்னப்படும். ஆகமானுசாரமான மதங்கள் தாந்திரிகமென்னப்படும். வைதிகர் வைதிகத்தையே அனுஷ்டிக்கவேண்டுமென்றும், தாந்திரிகர் தாந்திரிகத்தையே அனுஷ்டிக்கவேண்டுமென்றும் சூதசங்கிதை வரையறுத்துக் கூறியது. நிற்க,

ஆதிகாலத்தில் வைதிகமென்று ஒரே மதமிருந்தது. அது சிரௌதம் ஸ்மார்த்தம் என்று இருவகையாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. சிரௌதமென்பது வேதங்கூறிய வாசாரமுறை. ஸ்மார்த்த மென்பது வேதத்தை மூலமாகக்கொண்ட ஸ்மிருதி கூறிய ஆசாரமுறை. வைதிகத்தில் அதிகாரமில்லாத சிலருக்கு ஆகமாசாரம் விதிக்கப்பட்டு இருக்கிறது. வைதிகர் வைதிகத்தையே அனுசரித்தார்கள். ஆகமத்துக்குத் தந்திரமென்று ஒரு பேருண்டு. அதுபற்றி அது கூறிய ஆசாரம் தாந்திரிகாசாரம் என்னப்படும். வைதிகநெறிபற்றினோர் தமக்குக் கிடைத்த உபதேசமுறைப்படி சிவன், விஷ்ணு, தேவி, கணபதி, சூரியன், சுப்பிரமணியர் இவர்களை ஆராதித்து வந்தார்கள். ' இவர்களுக்கு மதமொன்றேயாதலால் முக்தியென்பதும் ஒரே விதமாகவிருந்தது.



பிறகு ஆகமநெறிபற்றியது சைவம், வைணவம், சாக்தேயம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் (சூரியமதம்) என்று ஆறு மதங்களாயின. இவை ஆகம முறை வைதிகமுறை இரண்டாலும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. ஆகம முறைக்கும் வைதிக முறைக்கும் சிறிது வேறுபாடுண்டாதலால் அவ்விரு நெறிபற்றி முத்தியும் வேறுபட்டது. ஒவ்வொரு மதத்தரும் தத்தம் கொள்கையென நிலைபெறுவித்தற்குப் பல நூல்களை வெளியிட்டனர். சில நூல்கள் தாமாராதிக்கும் தெய்வத்தின் உலகமே முக்தியுலகமென்றும் அதை யடைவதே முத்தியென்றுங் கூறும். சில மதம் அவ்வுலகத்தில் சென்று அக்கடவுளுக்குப் பணிவிடை செய்துகொண்டு தெய்வத்தின் சமீபத்திலிருப்பதே முக்தியென்று கூறும். சில கடவுளின் சொரூபத்தைப் பெற்று அக்கடவுளுலகத்திலிருப்பதே முக்தியென்று கூறும். இவை முறையே சாலோக சாமீப சாரூபம் என்ற பதமுத்தியாவனவே யன்றி அழிவற்ற பரமுத்தியாகிய சாயுஜ்ய முக்தியாகாதென்று வைதிக நூல் கூறும்.

இந்தச் சாயுஜ்யமென்பதுதான் அழிவற்றதென்றும், அதுவே மீளா முக்தியென்றும் கூறும் வைதிக நூல்கள். முற்கூறிய சாலோக சாமீப சாரூபமென்கிற பதமுத்திகளும் சர்வ சங்காரத்தில் எல்லாம் அழிந்தபோது மூவகை முக்தர்களும் சாயுஜ்யமுக்தியை அடைவார்களென்றும், அதனால் இந்தப் பதமுக்தி மோட்ச சோபானங்களாமென்றும் கூறித் தழுவுகின்றனர். ஆதலால் இந்த நால்வகையான முக்திகளில் எதை யடைந்தாலும் முக்தியேயாமென்று கொள்ளலாமாயினும் தோற்றமுள்ளவெல்லாம் அழியும் தன்மையவே என்னும் வேதத்தொடுமாறுகொள்ளுமென்று மறுத்துச் சாயுஜ்யமொன்றையே பொருளெனக் கொள்வர் ஞானநூலோர்.

ஏனெனில், சாலோகாதி பதமுத்திகளைப்பெற்ற சிலர் மீண்டும் பூலோகத்தில் ஜனனமெடுத்து வந்தார்கள் என்று புராணங்களிற் காணப்படுகின்றன. ஆதலால் அவைகளுக்கும் ஒரு பெருங்காலவரையறை யிருக்கலாமென்பர். ஆயினும் அது போகவிருப்ப முடையவர்களுக்கேயன்றி ஏனையர்களுக்குக் கேட்கப்படாமையால் அது சர்வ சம்மதமல்லவென்பர் சிலர். புராணங்களும் இதிகாசங்களும் பதமுக்திபெற்றவர்கள் யாதாவதோர் காரணம்பற்றியே மீண்டும் பூவுலகில் ஜனிப்பார்களென்றும், அவர்கள் மீண்டும்

தம்பதத்தையடைந்து அங்கிருந்தே சாயுஜ்யத்தை யடைவார்களென்றும் கூறுகின்றன. ஆதலால் பதமுக்திகளும் சிறப்புடையனவென்றே நாம் கொள்ளவேண்டும்.

இணையற்ற சாயுஜ்யமென்கிற முக்தியே மோட்சம் என்று நூல்களாற் புகழ்ந்து கூறப்படுவது. அது நாமரூபகிரியையற்ற பரப்பிரமப்பொருளொடு வேறற ஒன்றாய்க் கலப்பதாம். இதிலும் வேதாகமங்கள் மாறுபடுகின்றன. நட்சத்திராதிஜோதிகள் சூரியன் ஒளியிற் கலந்து அவ்வொளிக்கு வேறாகாமலும் வேறாயும் விளங்குவதுபோலப் பரம்பொருளின் பரமபிரகாசத்தில் ஜீவன் அடங்கி நிற்பதே சாயுஜ்யமுக்தியென்று சிவாகம சாஸ்திரங்களிற் சில கூறுகின்றன. வேறுசில இதை மறுத்துப் பரசிவனைப்போலவே அச்சிவனுக்குச் சமானமாயிருப்பதேயாமென்று கூறும். இது ஆகமமாறுபாடு. எங்ஙனமாயினும் இவைகள் மீளாக்கதியே யாமென்று கொள்ளத்தக்கதென்பர் பெரியோர். (தொடரும்.)

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

---

## "நொறுங்கத் தின்றால் நூறிலும் சாவில்லை"
### அல்லது
## "நோறுங்கத் தின்றவனுக்கு நூறு ஆயுசு"

இப்பழமொழி முற்காலத்திலிருந்து நம் நாட்டில் வழங்கிவரும் பழமொழிகளிலொன்று. இதிலிருந்து நம்முன்னோர் சுகாதாரத்தை விருத்தி செய்வதற்கு எவ்விதம் முயற்சி செய்துவந்தனர் என்பது தெற்றென விளங்கும்.

இப்பழமொழியின் பொருள்—நாம் உண்ணும் உணவை நன்றாக நொறுங்கும்படி மென்று தின்றால் நூறு வயதிற்குக் கூடவே பிழைத்திருக்கலாம் என்பதே. சிலர் இதற்கு வேறுவிதமாகப் பொருள் கூறுகின்றனர். "நொறுங்கத் தின்றால் என்பது கண்டது கடையதை யெல்லாம் வித்தியாசம் பாராமல் மனம் போனவாறு உண்டால் ஆயுள் அதிகமாகும்" என்பதே அவர்கள் கூறும் பொருள். இது குருட்டுக்கொள்கையேயாகும். அறிவிலார் கூற்றெனலாம்.

கடவுள் நமக்கு அளித்திருக்கும் ஒவ்வொரு அவயவமும் நமது நன்மைக்கே. நமக்கு இருக்கும் பல்லையும் அவரே அளித்திருக்கிறார். அதனாலேயே கடவுள் நாம் உணவை நன்றாக மென்று சாப்பிடவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறதுபோலப் பற்களை யளித்தார் என்று தெரிகிறது. நாம் உண்ணும் உணவு நம் குடலில்போய்ச் சமிக்கிறது (சீரணிக்கிறது). நாம் உண்ணும் உணவு பொடிப்பொடியாய் நன்றாக நொறுங்கியிருந்தால் அது குடலுக்கு வருத்தந் தருவதில்லை. நாம் ஒன்றிரண்டாக மென்று விழுங்குவோமானால் அவ்வுணவு குடலில் போய்ச் சேர்ந்ததும் குடல் அதை மிக வருத்தத்



துடன் பொடியாக்கிக் கரைத்து (சீரணித்து) இரத்தமாக்குகிறது. அவ்விதம் வருத்தப்பட்டு உழைப்பதால் அதற்கு வேலை அதிகமாகிக் களைப்படைந்து அதற்குள்ள சக்தியையும் இழந்துவிடுகிறது. அதனால் நாளடைவில் சீரணக் கருவி வேலைசெய்யாமல் நின்றுவிடுகிறது. ஒரு எருது இழுக்கத்தக்க பாரத்திற்குமேல் வண்டியில் நாள்தோறும் அதிகமாய்ப் பாரம் ஏற்றிவந்தால் அவ்வெருதினால் அதை இழுக்கமுடியுமா? மிக்க வருத்தத்துடன் இழுத்துவிடுகிறதெனினும் நாள்தோறும் அவ்விதமே வருத்தத்துடன் இழுத்துவந்தால் அது அதிகநாள் உழைக்கமுடியாமல் சீக்கிரத்திலேயே சக்திகுறைந்து கடைசியில் வேலைசெய்யமுடியாமல் போய்விடுமல்லவா? அதுபோலவே நம்முடைய குடலும் வேலை அதிகமாவதால் சக்தி குறைந்து சீக்கிரத்தில் வேலை செய்யமுடியாமல் நின்றுவிடுகிறது. பிறகு குடல் வேலை செய்யாததுபற்றி உண்ணும் உணவு சமிக்கப்படாமல் மலச்சிக்கல் முதலிய பல நோய்கள் உண்டாகிக் கடைசியாக இறந்துபோகவேண்டியதுதான். (இங்ஙன் அளவுக்கு மிஞ்சி உண்பதனாலும் இவ்விதக் கெடுதியே நேரிடுமென்று கவனிக்க.) மனிதனுக்கு ஆயுள் நூறு ஆண்டுகளென ஏற்பட்டிருப்பினும் அவன் அவ்வாயுள் தன்னிடம் தங்கி இருப்பதற்கு வசதி ஏற்படுத்தாமலிருந்தால் அது அவனிடம் நூறாண்டுவரை நிலைத்திருக்குமா? நாம் உணவை நன்றாக மென்று தின்னாததினாலன்றோ நமக்கு ஆயுளும் குறைந்துவிடுகிறது.

நாம் நன்றாக மென்று உண்போமானால் அவ்வுணவு குடலின் வேலையை இலேசாக்கி அதற்கு நீண்டநாள் உழைக்கும் சக்தியைத் தரும். அது நீண்டநாள் உழைப்பதால் நமக்கு ஆயுளும் விருத்தியாகும். இதுபற்றியே இப்பழமொழி ஏற்பட்டதாகும். நன்றாக மென்று சாப்பிடும் பழக்கம் வருவதற்கு மெதுவாகச் சாப்பிட்டுவரப் பழகிவரவேண்டும். மெதுவாக என்றவுடன் அதிக மெதுவாகவும் உண்ணுதல் கூடாது. இதனாலும் பல நோய்கள் உண்டாகும். ஆகவே இனிமேலாவது நாமனைவரும் இப்பழமொழியை மனதிற்கொண்டு அதன் உட்கருத்துப்படி நடந்து நமது ஆயுளை விருத்திசெய்ய வழிதேடுவோமாக.

**அ. ச. அருணாசல ரெட்டியார்.**

குறிப்பு:—ஆகாரம் புசிக்கும்போது இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயமாகும். மேலும் நம் நாவிலிருந்து சுரக்கும் உமிழ்நீர் ஆகாரத்தைச் சமிக்கப்பண்ணும் ஒரு ஔஷதம் போன்றது. அது போதுமானவரை ஆகாரத்தோடு சேர்ந்தால்தான் அந்த ஆகாரம் சரியாய்ச் சீரணமாகும். நாம் உணவை நன்றாய் மென்றால் போதுமான உமிழ்நீரும் அதனோடு சேர்ந்து அது சுலபமாய்ச் சமிக்கச்செய்யும். இதற்காகவே நாம் உணவை வாயில் வைத்ததே உமிழ்நீர் சுரக்கும்படி ஆண்டவன் அமைத்திருக்கிறார். ஆ! அவர் கருணைக்கும் வல்லமைக்கும் அளவுண்டோ!

**பத்திரிகாசிரியர்.**

---

## குடம்பை எனும் சொற்பொருள் விளக்கம்.

1. **தமிழ்ப்புலமை சான்ற அன்பீர் !**

*" குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே*
*உடம்போ டுயிரிடை நட்பு "—என்பது நாயனார் குறள்.*

*இவ்வருமைத் திருவாக்கினுக்குப் பலர் பலவிதம் சொற்பொருள் கூறுகின்றனர். சென்ற ஆண்டு, புரட்டாசித்திங்களில் வெளியான ஆனந்தபோதினியில் மறுபிறப்பு என்ற வியாசத்தின்கண், ஓர் கிறிஸ்தவர் இக்குறளை மறுபிறப்பில்லை என்பதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். அவர் அக்குறளைப் பொருட்படுத்துவதை, (Vol. 9. No. 3.) 108-ம் பக்கம் பார்த்து உணர்க. இவர்தம் பொருள் வியக்கத்தக்கதேயாம்.*

2. *இன்னும் உச்சிமேற்புலவர் கொள்* **நச்சினார்க்கினியர்** *குடம்பை என்பதற்குப் பறவைக்கூடு என்ற பொருள் கொண்டு உடலுக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தமானது கூட்டிற்கும் அதிலுள்ள பறவைக்கும் உள்ள சம்பந்தம்போலும் என்று கூறியுள்ளார். ஆனால்* **வள்ளுவர் நூலின் பரித்த உரையிலெல்லாம் தேர்த்த உரையாசிரியரான பரிமேலழகரோ,** *உடம்பிற்குமுயிருக்குமுள்ள நட்பு முன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள்ளிருந்த புள் பருவம் வந்துழி பறந்துபோம் தன்மைத்து என்றனர். அதற்காகக் "கூட்டிலிருந்து காலையில் வெளிப்படும் பறவை அன்று மாலைக்குள் அதே கூட்டில் வந்தடைவதுபோல ஒரு உடலை விட்டு நீங்கிய உயிரானது மறுபடி எக்காலத்தாயினும் அதே உடலை வந்தடைவதுண்டோ? இல்லை. இதன்றியும் தாய்வயிற்றினின்றும் பிறக்கும்பொழுதே யிருக்கிற உடலுயிர் சம்பந்தத்திற்கு இடையிலே பக்ஷிக்கும் கூட்டிற்கும் உண்டாகும் சம்பந்தத்தை ஒப்பிடல் பொருத்தமின்று" என்று காரணங் காட்டுகின்றனர். இது நிற்க.*

*" காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்*
*ஆய்தல் அறிவுடையார் கண்ணதே "—என்பது நாலடி.*

*ஆதலால் யாமும் அவ்விதமே யாராயப்புகின் பல்வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதையாராய்வான் புக்கது இவ்வுரையாசிரியரிடம் குற்றங் காண்பான் போந்தல்ல.*

*" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"—என்ற நம் புலவர் திருமகனின் வாக்கினை ஒப்ப குடம்பை என்ற சொல்லின் மெய்ப்பொருள் அறியவேயாகும்.* **ஆதலின் நண்பீர் !** *குற்றங்காணின் மன்னிக்க.*

*நாம் ஒரு விஷயத்தை யாராயுமுன்னரே, அவ்விஷயகர்த்தரின் பெருமையையும், சிறுமையையும் நோக்குதல் கூடாது. யான் பரிமேலழகர் கூறிய பொருளை முதன்முதல் அறிந்தகாலத்து அது சரியன்று எனத் தோன்றிற்று. ஆனால் இவ்விடயத்தைக் குறித்து, ஆங்கிலத்திலும், தமி*



*ழிலும் பெரும்புலமை வாய்ந்தவரும், திருக்குறளை மிகவும் ஆராய்ச்சி செய்தவருமான எனது நண்பர் ஒருவரிடம் பேச நேர்ந்தபொழுது, அவர் கூறியதாவது, "திருவள்ளுவர் இவ்விடத்தில்* **புள்** *என்றது சாதாரணப் பறவை என்ற பொருளிலல்லவென்றும், மற்றும்* **புள்** *என்றே பறவையிலோரினமிருப்பதாகவும் அப்பறவையின் குஞ்சு முட்டையினின்றும் வெளிப்பட்டவுடனே பறக்கும்தன்மைத்து என்றும் கூறினார். யான் அதைக் கேட்டபொழுதிருந்து அப்பக்ஷியைப்பற்றி யறிய அவாவுற்றேன். சின்னாள் செல்லவும், ஓர்நாள்,* **ஸ்ரீமத் இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச ரத்னமாலையைப்** *படித்துக்கொண்டிருந்தகாலத்து, அவர், இப்பக்ஷியின் செயலை ஓரிடத்து மேற்கோளாக எடுத்தாளுகின்றனர். அங்கு அவர் அப்பக்ஷிக்கு* **"சிம்புள்"** *என்று பெயரெனவும் அப்பக்ஷி ஆகாயத்தில் பறக்கும்பொழுதே முட்டையிட்டு, அம்முட்டையும் உடனே வெடித்துக் குஞ்சும் பொரித்து அக்குஞ்சும் உடனே பறக்கும் தன்மையடையும் எனவும் கூறியுள்ளார். ' இப்பக்ஷியைத்தான் செந்நாப்போதார் எடுத்தாண்டார் என்றும், அவர்தம் உவமை கூறும் திறம் இதனின்றும் நன்கு விளங்குகின்றதெனவும்; எனது நண்பர் அவரியற்றிய புத்தகத்தில் கூறியுள்ளார்போலும். நமது செந்நாப்போதாரின் பக்ஷிசாஸ்திர ஞானம் வியக்கத்தக்கதே.*

4. *இனி நாயனாருக்கு முற்பட்டகாலத்தில் குடம்பை என்ற சொல்லின் பொருள் எவ்விதம் வழங்கி வந்தது, பின்னர் எவ்விதம் வழங்கப்பட்டது என்பதை யாராய்வது முதற்கடமையாகும். பொய்யில் புலவருக்குப் பன்னூறு யாண்டுகளுக்கு முன்பே தோன்றிய* **சேந்த னியற்றிய திவாகரத்தில்,**

*" குடம்பை பஞ்சரம் பட்சி கூடாகும் "*

*" அண்டமுஞ் சினையும் அவற்றின் முட்டை " எனவழங்கப்படுகின்றது. ஆதலின் குடம்பை என்ற சொல்லுக்கு முட்டையென்ற பெயரே இல்லை என்பது பெறப்படுகின்றது. பின்னும் நாயனாருக்குப் பிற்பட்ட காலத்திலும் இச்சொல்லுக்குக் கூடென்ற பொருளே இருந்ததாகக் காணப்படுகின்றது.*

**நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில்,**

*"புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும் "—என்றும்*

**பெருங்குறிஞ்சி உரையில்,**

*"பறவைகள் குடம்பைக்கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே" என்றும் காணப்படுதலால் அச்சொல்லினுக்கு கூடு என்ற பொருளே பொருத்தமாகின்றது.*

5. *ஆயினும் அச்சொல் ஒரோ விடங்களில் முட்டையென்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கலாம் எனினும் அவை ஆராய்ச்சிக்குப் போதுமான சான்றாகவில்லை. மற்றும்* **பிங்கலந்தையார்,**

*"அண்ட ஞ்சினை கோச மரிட்ட முட்டை"* **என்ற விடத்துக் குடம்பை**

விடுத்தும், பின்னர் "குடம்பை முட்டையுங் கூடுமாகும்" என்று கூறிய தன் காரணம் யாதோ அறியேன். இவர் பரிமேலழகர் காலத்திற்குப் பிற்பட்டவரானதாலே அவர் கூறியதை யறிந்தபின்பு இவர் மயங்க உணர்ந்தமையே காரணமாகும் ஆதலின் பரிமேலழகர் காலத்திற்கு முந்திய திவாகரத்தை விடுத்து, பிந்திய பிங்கலந்தையினின்றும் இச்சொல்லின் பொருளுக்கு விதிகாட்டுவது பொருந்தாததாகும். ஆகவே நாயனர் குடம்பை என்ற சொல்லைக் கூடென்ற பொருளிலேயே யமைத்தார் என்பதும், ஆனல் ஆசிரியர் பரிமேலழகர் தம் கருத்திற் கியைய அச் சொல்லிற்கு முட்டையென்ற பொருளைக் கற்பித்தார் என்பதும் பெறப்படுகின்றன.

6. இன்னும் நம் பண்டை நூலாசிரியரெல்லாம் உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை எவ்விதம் விளக்கியுள்ளார்கள் என்பதைப் பார்ப்பாம். கங்கைகுலதிலகராம் காராளர் மரபிலுதித்த **பட்டினத்தடிகள் கோயிற்றிரு அகவலில்,**

"உயிரெனுங் குருகுவிட் டோடும் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்தும்
கொழுந்தசை மேய்ந்தும் ஒழுக்குவிழும் குடிலை" என்றும்

**திருமூலர் திருமந்திரத்தில்,**

"தோற்பையுணின்று தொழிலறச் செய்தூட்டும் கூத்தன்
புறப்பட்டுப் போனவிக் கூட்டையே" என்றும்,

மற்றும் **சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளியற்றிய அருட்பாவின் ஆறு**வது திருமுறை உறுதி கூறலில்,

"கூடுவிட்டிங்காவிதான் போயினபின் எது புரிவீர் எங்கே குடியிருப்பீர்" என்றும், பின்னும் **நல்வழியில்,**

"கூடுவிட்டிங்காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்" என்றும் இன்னும் **சர்வசாதாரணமான உலகவழக்கில்,**

"கூட்டைவிட்டுப் பக்ஷி பறந்துபோய்விட்டது" என்றும் கூறப்படுதலால் கூட்டைவிட்டோடும் புள்ளையே உயிருக்கு உவமித்துள்ளார்கள் என்பது பெறப்படுகின்றது. ஆனல் பரிமேலழகர்மாத்திரம் முட்டையையும் குஞ்சினையும் உவமை கூறுதல் இப்பெரியார்களின் அருள்வாக்கை யெல்லாம் மருள்வாக்கெனக் கூறுவதற்குச் சமானமா யிருக்கிறதேயொழிய வேறில்லை.

7. ஆனல் பரிமேலழகர் இவ்விதம் கூறுவதற்குக் காரணம் இரண்டேயாம். முதலாவதாக உடம்பில் உயிர் மீண்டும் புகாமற் போதற்கு கூட்டினுள் மீண்டும் புகுதலையுடைய புள்ளை உவமை கூறுவது பொருந்தாதென்கிறார். இங்கு கூட்டைவிட்டேகிய இளம்புள் மீண்டும் புகுதலுடைமையைக் கண்டவர் யாவர் ஒருவருமிலர். மானுடராகிய நம்மைப்போலவே பறவைகளும் வாழ்கின்றன என்று நாம் அனுமானித்துக்கொள்வதா? யாமோ தினந்தோறும் நூற்றுக்கணக்கான காக்கைகள் இரவில் ஒரே மரத்



தில் தங்கி மறுநாட்காலையில் வெளிச் செல்வதைக் காண்கின்றோம். ஆனல் மரத்திலோ கூடு ஒன்றுகூடக் காணமுடியவில்லை. ஆனல் கூடும் புள்ளுமென்றதெங்ஙனம்? என வினவுவீராயின், பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சுபொறித்து குஞ்சுக்கு இறைதேடப்போய் பின்னர் திரும்பிக் கூட்டில் புகும். இதைக்கண்டே பலர் பலவிதம் மயங்குகின்றனர்.

"குஞ்சுறை, கட்சி, கூண்டு, குடம்பையே கூட்டின் பெயராம்" என்பதினின்றும், **குடம்பை யென்பது இளம்புள்ளின் கூடேயாம்** என்பது தெள்ளிதிற் புலனும். இங்கு நாயனரால் உவமை கொள்ளப்பட்டதும் இளம்புள்ளையேயன்றிப் பெரும்புள்ளையன்று. அவ்விளம்புள் பருவம் வந்துழிப் பறந்துபோம் தன்மைத்தாதலின், நம் காலமுடிந்ததும் உயிராகிய புள் உடம்பாகிய கூட்டைவிட்டுப் பறந்துபோய்விடும் என்பது யாவரும் மறுத்தற்கரிய உண்மையேயாகும்.

8. மற்றும் பரிமேலழகரோ, உடலும் உயிரும் உடன் தோன்றுதல் போலக் கூடும் புள்ளும் உடன் தோன்றவில்லை என்கின்றனர். ஆனல் உடல் உயிரோடு கூடியும் தனித்தும் நிற்குமாறுபோல் கூடும் புள்ளோடு கூடியும் தனித்தும் இயங்கும். முட்டையோ கருவோடு கூடி யல்லது தனித்தியங்குவதின்று. இன்னும் புள்ளென்னுஞ் சொல், பிறகு முதிர்ந்து பறக்குந் தன்மையையுடைய பறவைக்கேயுரியது.

"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" ஆதலின் கருவிற்காவது அன்றிப் புதிதாய்ப் பிறந்த குஞ்சிற்காவது புள்ளென்ற பெயர் வழங்கப் படுதலில்லை என்பது பெற்றும். ஆகலின் பறக்குந் தன்மையையுடைய பறவையே புள் ஆகும். அது கூட்டைவிட்டுப் பறந்து செல்வதொப்பவே நம்முயிரும் உடலைவிட்டுப் பிரிந்து செல்கின்றது என்ற உவமை நம் செந்நாப்போதாரால் எடுத்தாளப்பட்டது என்பதே சாலச் சிறந்ததாம்.

9. இதுவரை நான் கூறிவந்தது, நச்சினார்க்கினியரை உச்சிமேற்கொள்ளவும், பரிமேலழகரைப் பரிபவம்பண்ணவும் எண்ணியல்ல. திருக்குறளுரையாசிரியர்களிலெல்லாம் பரிமேலழகரே சிறந்தவர் என்று உறுதி கூறலாம். அதற்கு,

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தஉரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தஉரை யாமோ தெளி"

என்ற பாவினைவிட வேறு சான்று வேண்டுவதில. ஆயினும் **யானைக்கும் அடிசறுக்கும்** என்பதொப்ப பரிமேலழகர் இவ்விதம் மாறுபடக் காரணம் அவர் இச்சொல்லின் பொருளை ஓர் சிறிது மயங்க உணர்ந்தமையேயாகும். இவ்விதம் அவரிடம் குற்ற[illegible] புகழுக்கு ஓர் இழுக்கு உண்டென்று கொள்[illegible]மதியம் காண்பது அரிதேயன்றோ!

எனக்குச் சிறிது காலத்திற்கு முன்பு உடற்கூறு விளக்கும் ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற **திருவாளர் B. S. இரத்தினவேல் முதலியாரவர்கள்** இத்தகையதோர் ஆராய்ச்சியினைச் செய்துள்ளார்கள். அவர்களது ஆராய்ச்சியின்பால் கண்டதோர் உவகை இவ்வியாசம் வரைய என்னைத் தூண்டிற்று. ஆதலின் எனதன்பார்ந்த வந்தனம் அவர்களுக்கு உரித்தாகுக. சுபம்.

**தோ. மு. பாஸ்கரன்,**
“சித்திராலயம்” திருநெல்வேலி.

**குறிப்பு** :—இத்தகைய விஷயங்களில் திருட்டாந்தம் தாவ்ஷ்டாந்தத்தோடு எல்லா அம்சங்களும் பொருத்தமாகவிருக்குமென்று எதிர்பார்க்கலாகாது. எடுத்துக்கொண்ட விஷயத்தில் எந்த அம்சம் அல்லது அம்சங்களுக்காகத் திருட்டாந்தம் கூறுகிறோமோ அந்த அம்சம் அல்லது அம்சங்களில் மட்டிலுமே திருட்டாந்தம் தாட்டாந்தத்தோடு பொருந்தியிருக்கிறதாவென்பதைக் கவனிக்கவேண்டும்.

“குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு”

என்ற குறட்பா “நிலையாமை” என்ற அதிகாரத்தின்கண் கூறப்பட்டுள்ளது. ஈண்டு ஆக்கை நிலையாமை யென்பதைப்பற்றி இப்பா கூறுகிறது.

உயிருக்கும் தேகத்திற்குமுள்ள சம்பந்தம் எப்போது மிருக்கக்கூடிய சம்பந்தமல்லவென்பதையும் ஒருகாலத்தில் சீவன் தேகத்தை அறுதியாய்த் தனியே கிடக்கவிட்டுத் தான் வெளிப்பட்டுப்போய்விடும் என்பதையும் விளக்க, “தேகத்திற்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம், முட்டை தனியே கிடக்கவிட்டு அதனுள்ளிருந்த பட்சி பருவம் வந்தகாலத்தில் பறந்துபோன தன்மையையொத்தது” என்றார் பரிமேலழகர்.

இதிலுள்ள அம்சங்கள் எவையெனின், பார்வைக்கு என்றும் ஒன்றைவிட்டொன்று பிறிபடாதவைபோல் தோன்றினும் ஒருகாலத்தில் ஒன்று மற்றொன்றை அறவே விட்டுப்போய்விடுந் தன்மையையுடையது. அதாவது விட்டுப் பிறிந்தது மறுபடி போய் ஒன்றுசேர்வதில்லை.

திருட்டாந்தத்தில் முட்டையும் அதற்குள்ளிருக்கும் குஞ்சும் பிறிபடாதவைபோலவே தோன்றினும் குஞ்சு பக்குவமடைந்ததே முட்டையைத் தரையில்கிடக்கவிட்டுத் தான் வெளிப்பட்டுப்போய்விடுகிறது.

இதுபோன்றே தாட்டாந்தத்தில், உடலும் உயிரும் பிறிபடாத ஒன்றுபோலவே தோன்றினும், உயிர் வினை யொழிந்ததும் தேகத்தைத் தனியே தரையில் கிடக்கவிட்டுத் தான் வெளிப்பட்டுப் போய்விடும். மறுபடி அத்தேகத்தில் நுழைவதில்லை.

இரண்டு விஷயங்களும் வேண்டிய அம்சங்களில் பொருத்தமுடையனவாகவே யிருக்கின்றன. இங்கு முக்கிய விஷயம் “என்றைக்கேனும் ஒருநாளைக்கு தேகம் சவமாய்விழ ஆன்மா அதைவிட்டு நீங்கிவிடும் ஆகையால் தேகம் சதமாய் இருக்குமென்று நம்பாமல் அதுள்ளபோதே நீ செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்துக்கொள்” என்பதே.



இவ்வளவே போதுமானதாயிருக்க, குடம்பை என்பதற்குக் கூடு முதலிய வேறு பொருள்கள் உளதாலும், புள் என்ற ஒரு பட்சி யிருப்பதாலுமே நாம் அவற்றைப் பொருளாக உத்தேசித்து ஆராய்ச்சி செய்துகொண்டு போவது அநாவசியமென்றே நமக்குப் புலப்படுகிறது. காகம் முட்டையிடும் பருவத்தில்தான் கூடுகட்டி குஞ்சுபொரித்துக் குஞ்சு நன்றாகப் பறக்குந்தனிலும் அக்கூண்டில் வசித்திருந்து பிறகு பிறிந்துபோம். மற்ற காலங்களில் இரவை மரக்கிளைகளில் தங்கியிருந்தே கழிக்கும்.

பட்டினத்தடிகள் முதலியவர்கள் தேகத்தைக் கூடெனக் கூறியது, பட்சிக்குக் கூடு வாசஸ்தலமா யிருப்பதுபோல், சீவனுக்கு இந்தத் தேகம் ஒரு கூடுபோலிருக்கிறது; பட்சி நினைத்தபோது கூட்டைவிட்டுப், போய்விடுவதுபோல் சீவனும் காலம் வந்தபோது தேகமாகிய கூட்டைவிட்டுப் போய்விடும் என்றமட்டில் அறிவிக்கவேயன்றி வேறில்லை. அவர்கள் அபிப்பிராயப்படி அவ்வாறு கூறியதாலேயே, பரிமேலழகர் முட்டையும் குஞ்சும் என்று பொருள் கூறியதால், அவர்கள் கூறியதை அவர் மறுத்துக் கூறியதாக நாம் கருத ஒரு காரணமுமில்லை. நாயனார் கூறியதற்கு அவர் பொருள் கூறினர். கூறியது அவசியமான அம்சங்களில் பொருத்தமாகவே யிருக்கிறது. பட்டினத்தடிகள் முதலிய பெரியோர் தத்தம் அபிப்பிராயப்படி சீவனுக்குத் தேகம், பட்சிக்குக் கூடுபோன்றது என்று உபமானம் கூறினார்கள். இவற்றில் ஒருவர் கூறியது மற்றவர் கூறியதைக் குற்றப்படுத்தியதாய்க் கருத ஒருகாரணமுமில்லை. அதோடு இப்போது நமக்குப் புலப்படும் இந்த ஆராய்ச்சி யோசனைகளனைத்தும் பரிமேலழகற்குப் புலப்படாமலிருந்திருக்குமோ என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும்.

**பத்திரிகாசிரியர்.**

---

## பகவத்கீதை வசனம்.

(155-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 15-வது, *பிரபஞ்சவத்தியாயம்.

[முன்பு பதினான்காம் அத்தியாயத்தின் முடிவில் அநந்நிய புக்தியினால் பரமேசுரனை என்னைச் சிந்தனம் செய்வோர் ஞானவாயிலாக முத்தியடைவர் என்று பகவான் கூறி யருளினர். அத்தகைய அநந்நிய பக்தியும் ஞானமும் சம்சாரத்தில் விரக்தியடைந்த வைராக்கிய புருடனுக்கே உளவாமாதலின், வைராக்கிய பூர்வகமாக ஞானோபதேசம் செய்யக் கருணைகூர்ந்த பகவான் சம்சாரத்தை விருக்ஷ ரூபமாக வர்ணித்தருளுகின்றார்.]

(இப்போது பகவான் சம்சார ரூபமான மாயையைத் தலைகீழாகவுள்ள ஒரு விருக்ஷத்திற்கு ஒப்பிட்டு விவகரித்தருள்கிறார்.)

---

* இதற்கு வடமொழியில் புருஷோத்தம யோகமென்று பெயர்.

ஏ பார்த்த! மஹாமாயையால் உண்டாக்கப்பட்ட இச்சம்சாரமாகிய விருக்ஷமானது வேர் மேலாகவும் கிளைகள் கீழ்நோக்கியு முடையது. அழியாதது. வேதத்திலுள்ள கர்மகாண்டங்களாகிய இலைகளையுடையது. இது அசுவத்தம் (அரசமரம்) என்ற பெயரையுடையது. இதன் சுபாவமாகிய வகை யாதெனின் கூறுதும்.

இது தனக்குச் சமானமானதொன்றும் இல்லாதபடி, மஹத்தாகிய பிரமசொரூபத்தின்கண்ணின்றே உண்டாகும். கிரமப்படி ஆகாயமுதல் தூல உருவங்கள் ஈறாகவுடைய சகல பிரபஞ்சங்களும் உண்டாகின்றபடியால் மூல காரணமான பிரம்மமே வேராகவுடையது. பிராணிகளின் வினை வசத்தால் வராநின்ற உலகங்களாகவும் உயிர்களாகவும் எழுகின்றதால் காரிய உபாதிகளையுடைய இரண்ய கர்ப்பாதிகளைத் தலைகீழ்நோக்கியிருக்கும் சாகைகளாகவுடையது. தோற்றம் ஸ்திதி நாசம் உடைய பந்தரூபமாகிய பிறவித் தொடர் என்ற அச்சம்சார விருட்சத்தின் பிரவாகமானது, ஒருகாலத்தும் முழுமையும் சூனியமாகும்படி அழியாமையின் ஒரு தன்மையதாயுள்ளது.

ஏ பார்த்தா! கர்ப்பத்தில் உண்டான காலமுதல் இச்சம்சாரவிருட்சம் புண்யபாபகர்மங்களால் வளராநிற்கும் விருப்பமுடையதாதலால் அரிய நான்கு வேதங்களையே இலைகளாகவுடையதென அறிதி. இச்சம்சார விருட்சம் எதிர்காலத்தில் ஒரு நாள் இருக்குமென விரும்பும்படி யில்லாததால் இதற்குப் பிரசித்தமான அசுவத்த விருட்சம் என்ற நாமம் சூட்டப்பட்டது.

[பிரம்மமே சகல பிரபஞ்சங்கட்கும் மூலகாரணமாகையால் இச்சம்சார விருக்ஷத்திற்கு பிரம்மம் வேர் எனப்பட்டது. அது ஆனந்தமும் நித்தியமுமானதால் ஊர்த்துவமாம். அதாவது மேல்நோக்கி இருப்பதாம். அச்சம்சாரம் மாயாசம்பந்தமுடையதாயும் பிறப்பிறப்பாகிய பெரும்பிணியை யளிப்பதாயும் இருப்பதால் அச்சம்சார விருக்ஷத்தின் சாயைகள் அதோமுகமாயிருப்பனவாம். அதாவது கீழ்நோக்கி யிருப்பனவாம். விருக்ஷம் எப்படி கந்தத்தினின்றுண்டாயிற்றோ அவ்வாறே இச்சம்சார விருக்ஷமும் புத்தியினின்றும் நாலுவகையான பரிணாமங்களை யடைந்திருக்கிறது. சாதாரண விருக்ஷத்தில் துவாரங்கள் இருப்பதுபோல் இதில் சுரோத்திரம் முதலிய இந்திரிய துவாரங்களிருக்கின்றன. விருக்ஷத்தில் கிளைகளிருப்பதுபோல் இச்சம்சார விருக்ஷத்தில் ஆகாசாதி பூதங்கள் முதலிய தத்துவங்கள் பரந்து கிடக்கின்றன. இந்த விருக்ஷம் ஸப்த ஸ்பரிச முதலிய பத்திரங்களையுடையது. தர்மாதர்மரூபமான புஷ்பங்களையும், அவற்றினின்றும் உண்டாகும் சுகதுக்கங்களாகிய கனிகளையுமுடையது. கனிகளையுடைய விருக்ஷத்தில் பக்ஷிகள் வந்து சேர்வதுபோல் இச்சம்சாரமாகிய அசுவத்தமென்னும் விருக்ஷத்தில் சீவகோடிகள் இருக்கின்றன. இச்சம்சார விருக்ஷத்தில் சுத்தப்பிரமம் சர்வசாக்ஷிமாத்திரமாய், அதன் குணதோஷங்களில் சம்பந்தப்படாமல் தாக்கற்று நிற்கிறது.

இத்தகைய சம்சார விருக்ஷத்தை ஆன்ம ஞானமாகிய வாளினால் மூலத்



தோடு அழிப்பவனே முத்தியடைவான். [அதாவது அதன் சுகதுக்காதிகளாகிய கனிகளைப் புசியாமல் அவற்றில் இச்சைவையாமல் யாவற்றிற்கும் சாக்ஷிமாத்திரமாய் இருக்கும் நிலையாகிய ஆன்மசாக்ஷாத்காரத்தை யடையும் அதிகாரி புருடனே மீண்டும் பிறவாமுத்தியாகிய வீடடைவான்.]

(பகவான் மேலேகூறிய சம்சார விருக்ஷத்தின் அவயவங்களை இன்னொருவிதமாக விளக்கிக் காட்டுகிறார்.)

ஏ பார்த்த! இம்மாயா சம்சார விருட்சத்தின் கூறுபாடுகள் இவையாகும். இவற்றை நான் கூறியபடியே யுள்ளபடி நுட்பமாக உணராநிற்பவர் வேதத்தின் பொருள் முழுவதும் உணர்ந்தோராவர். இப்பெரிய சம்சார விருட்சத்தின் அவயவ கற்பனைகள் இன்னும் சில உள. அவற்றைக் கூறுதும் கேட்பாயாக.

எனது கண்மணிக்கொப்பாகிய பார்த்த! இச்சம்சார விருட்சமானது நாலுவித யோனிகளின் வழியே பூமி முதலிய கீழ் உலகத்து வளர்வனவும், தேவலோக முதலிய மேல் உலகத்துள்ளனவுமான அளவிறந்த பிறவிகளாகிய கிளைகளையுடையது. (சீவர்கள் புண்ணியகர்மவசத்தால் ஊர்த்துவ யோனிகளிலும், பாபகர்மவசத்தால் அதோயோனிகளிலும் பிறக்கின்றன.)

பல ஜன்மங்களில் புசித்த போகானுபவத்தாலுண்டாகும் இராகத்துவேஷாதிகளென்கிற வேரானது பல மநுட வுலகின்கண்ணே (மநுட தேகங்களில்) அஞ்ஞானத்தோடு கூடி வீழ்ந்திருத்தலின், இச்சம்சார விருட்சத்தின் வேர் கீழேயுமுளதாம். இந்த விருட்சம் பிரியாதுண்டாகின்ற சத்துவாதி குணங்களாகிய ஜலத்தால் வளராநிற்கும். இந்திரிய சம்பந்தமான சப்தாதி விஷயங்களாகிய தளிர்களையுடையது.

[முன்பு சம்சார விருட்சத்திற்கு மூலமாகிய பிரம்மம் என்ற வேர் மேலாக உள்ளது என்று கூறப்பட்டது. அது முக்கியமான வேர். இராகத்துவேஷாதி வாசனைகள் அவாந்தரமூலமாகும். அதாவது இச்சம்சார விருட்சத்திற்கு உள்ளுக்குள்ளாக விருக்கும் வேர்போன்றது.]

(இச்சம்சாரம் அநிர்வசனீயம் என்று பகவான் அருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! இந்த மாயா சம்சார விருட்சமானது விழித்தால் பொய்யாகும் சொப்பனக்காட்சிபோலவும்,பொய்யாகிய தோற்றம் மாத்திரமாக வுள்ள பேய்த்தேர் (கானல்நீர்) போலவும், (ஜாலக்காரன்காட்டும்) தோன்றி யுடனே மறையும் கந்தர்வ நகரம்போலவும் உள்ளதால் தனக்கென யாதொரு உருவமுமில்லாதது. முதலில் இல்லாதிருந்து உண்டாவது. ஆதிகாலமும் பின்னர் அபாவமாகும் காலமும் இல்லாமையாலே அந்தமும் ஆதியும் அறியப்படாதது.

(இப்போது பகவான் இம்மாயா சம்சாரவிருக்ஷத்தைச் சேதிக்கும் உபாயம் கூறியருள்கின்றார்.)

இந்த மாயா விருக்ஷத்தினைத் திடவைராக்கியமென்ற வாளால் வெட்டி, பிரம்மசொரூபமாக இருந்தபடியிருந்தே இந்திரசாலம்போல மாயா சொரூ

பமான இப்பிரபஞ்சமனைத்தையும் தோற்றுவிக்கின்ற ஆதியந்தமற்ற என்னைச் சரணமடைதலே, ஏ பார்த்த! பிரமத்தை யறிதற்குத்தக்க உபாயமாகும்.

[மாயை அநிர்வசனீயம். அதுபோன்றே மாயாகாரியமாகிய சம்சார விருட்சமும் அநிர்வசனீயமாகும். அதனுடைய அநித்தியத்தன்மையை யுணர்ந்து அதனிடத்து, பூரண விரக்தியடைந்து அதனிடத்துண்டாகும், சந்தோஷம் துக்கமாதிகளில் தாக்கற்றவனாகி, ஈசுவரனிடத்து அநந்நிய பக்தி பொருந்தியிருப்பதே பிரம்மான்ம ஐக்கிய ஞானமடைதற்கு மார்க்கமாகும்.]

ஏ அர்ச்சுனா! தம்மையடைந்துள்ள இராகத்துவேஷாதி குணங்களை நிக்கிரகம்செய்த ஞானிகள் தரிசிக்கும்வண்ணம் தோன்றாநிற்கும் எனது சொரூபம் எத்தகைய சுபாவமுடையதெனின், சகல பிரபஞ்சங்களையும் பிரகாசிப்பிக்கின்ற சூரியன், சந்திரன், அக்கினி என்ற இவைகளின் ஒளியால் பிரகாசிப்பிக்கப்படாத தன்மையையுடைய சொப்பிரகாச சொரூபமானது. வந்தடைந்தோர், பிறகு தமது சொரூபம் வேறொருவிதமாகாத தன்மையையுடையது. (அதாவது அச்சொரூபத்தை யடைந்தோர் அச்சொரூபமயமாய் விடுவார்களேயன்றி மறுபடி பிறவார் என்பதாம்).

(சுவர்க்காதிகளை யடைந்த கர்மிகளும் பிரளயங்களிலுள்ள பிராணிகளும் மீண்டும் ஜனியாநிற்க உம்மை யடைந்தோர்மட்டும் ஏன் ஜனியார் என்ற அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் காரணம் அருள்கின்றார்).

ஏ பார்த்த! குடத்தில் தோன்றும் கடாகாயம் அசைதற்போலும், தடாகத்தில் பிரதிபலித்துள்ள பிரதிபிம்ப சந்திரன்போலும் சரீரங்கள்தோறும் அன்னியமாய் ஜீவன்போல் நின்றே சுரோத்திராதி புலன்களையும் மனதையும் அவ்வவற்றின் சுபாவ விஷயங்களில் நான் பிரேரிப்பேன்.

[கடம், தடாகஜலம் ஆகிய உபாதிகள் நசித்ததே கடாகாயம் மகாகாயத்திலும், பிரதிபிம்ப சந்திரன் அதிஷ்டான சந்திரனிலும் கலந்துவிடுவதுபோல், ஆன்மஞானத்தால் அஞ்ஞானம் நீங்கியதும் சீவான்மா தனது சொரூபமான பிரம்மத்தில் கலந்து மறுபடி ஜனியாதென்பது பெறப்படுகிறது.] (தொடரும்.) சீடன்.

---

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(158-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதலில் இருவரும் அது அச்சுதனுடைய ஆவேசமே யென்றெண்ணினார்கள். அதிலும் அச்சுதனைத் தன் கையால் கொன்ற மலையாளி அது ஆவேசமென்றே பூரணமாய் நம்பிக்கொண்டான்.

எதிரில் நிற்பவன் மறுபடி பேசத்தொடங்கி உயிருள்ள சாதாரண மனிதர் குரலாகவே "வந்தனம் அய்யன்மீர், என்னைக் காண்பது உங்களுக்கு மிக்க ஆச்சரியத்தை யுண்டாக்கிவிட்டதாய்த் தெரிகிறது" என்றான்.



மலையாளி பயத்தால் வாய்திறக்க முடியாமல் அசையாது நிற்கிறான். கறுப்பண்ணன் மெதுவாய்த் தன் மனதைச் சரியான நிலைக்குக் கொண்டு வந்து சற்று தைரியத்தோடு, "நீயார்?" என்றான்.

**அம்மனிதன்** :—"ஏன்? உண்மையாகவே நீங்கள் என்னை யறிவீர்களே" என்றான்.

**கறுப்பண்ணன்** :—"நீ யாரோ எங்களுக்குத் தெரியாது. உடனே இவ்வீட்டைவிட்டு அப்புறம் செல்" என்றான்.

**அம்மனிதன்** :—"நல்லது. உங்களைப்போல் நீங்கள் யாரோ எனக்குத் தெரியாது என்று நான் கூறமுடியாது. நான் உங்கள் இருவரையுமறிவேன். அதுமட்டுமல்ல. உங்கள் விவகாரங்கள், எண்ணங்கள் யாவும் எனக்குத் தெரியும்" என்றான்.

கறுப்பண்ணன் உடனே தன் கைத்துப்பாக்கியை யெடுத்து அம்மனிதனுக்கு நேராய் நீட்டிக்கொண்டு "போ யிதை விட்டு; இன்றேல் சுட்டுவிடுவேன்" என்றான். அது மனிதனேயோ ஆவேசமோ இரண்டிலொன்றை யறிந்துவிடுவோம் என்று துணிந்து அப்படிச் செய்தான்.

அறையின் மத்தியில் நிற்கும் மனிதன் சற்றும் அசையாமல் முகத்தைக் கூட சுளிக்காமல் புன்னகையோடு நின்றுகொண்டே யிருந்தான்.

கறுப்பண்ணன் மறுபடி "போ இதைவிட்டு இன்றேல் சுடுவேன்" என்றான்.

மலையாளி அவன் துப்பாக்கி பிடித்த கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "அட தெய்வமே-சுடாதே-பேசாமலிரு" என்றான். கறுப்பண்ணன் திமிரிக்கொள்ள முயன்றான். மலையாளி விடவில்லை. அதனால் சற்றுநேரம் இவர்களுக்குள்ளேயே மல்யுத்தமாய்விட்டது. கடைசியில் கறுப்பண்ணன் மலையாளியின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான். இருவரும் சட்டென்று அம்மனிதன் நிற்குமிடத்தை நோக்கினார்கள். அங்கு ஒருவருமில்லை. மனிதனோ ஆவேசமோ, அவ்வுருவம் மாயமாய்ப் போய்விட்டது.

கறுப்பண்ணன் மிக்க கோபமடைந்து தன் கூட்டாளியை நோக்கி,

"அட மூடனே! அவன் தப்பித்துக்கொண்டு போகும்படி செய்துவிட்டாய்" என்றான்.

**மலையாளி** :—நீயே முழுமூடன். ஸ்தூலதேகமில்லாமல் கண்களுக்குமட்டும் புலப்படும் பொய் உருவத்தைச் சுடுவதால் என்ன பயன்?" என்றான்.

**கறுப்பண்ணன்** :—நீ பெரிய தவறு செய்துவிட்டாய்.

**மலை** :—என்ன தவறு?

**கறுப்** :—அது அச்சுதனே.

**மலை** :—இல்லை. அது ஆவேசமே.

கறுப் :—"சேசே. ஒருகாலுமில்லை. ஆவேசமாவது பேயாவது! அது நம் போன்ற மாமிசதேகமுடைய மனித வுருவமே என்றான்.

இதைக் கேட்டதே மலையாளியின் கண்களில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. அவன் துரிதமாய் எழுந்து நின்று தன் நண்பனை நோக்கி,

"அது உண்மையான அச்சுதனுகவே யிருக்கும்பட்சத்தில் அவன் இன்னும் இவ்வீட்டிற்குள்ளேதா னிருக்கவேண்டும்" என்றான்.

கறுப் :—இருக்கலாம்.

மலை :—அப்படியாயின் அவன் உயிரோடு இதை விட்டு வெளியிற் செல்லும் படி விடலாகாது.

கறுப் :—"சுண்டெலி பிடிக்கப் பூனையே தகுதியுடையதுபோல் நீயே யவனைப் பிடிக்கத் தகுந்தவன். போய் பிடி பார்ப்போம்" என்றான்.

மலை :—"ஆகா. இதோ பிடித்துவிடுகிறேன் பார்" என்று கூறிக்கொண்டே சந்தடி செய்யாமல் அங்கிருந்து புறப்பட்டான்.

கறுப்பண்ணன் அந்த அறையிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தான். சுமார் கால்மணிநேரங் கழித்து வீட்டிற்குள் இரண்டுபேர் கட்டிப் புரண்டு சண்டையிடுவதுபோல் அமக்களமான சத்தம் கேட்டது.

அச்சத்தத்தைக் கேட்டதே கறுப்பண்ணன் திடுக்கிட்டெழுந்து ஒரு இராந்தலை யெடுத்துக்கொண்டு அறையைவிட்டுப் புறப்பட்டு கூடத்திற்குச் சென்று நோக்கியபோது, கூடத்தின் இடதுபக்கம் சமீபத்திலேயே அச்சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தான். இரண்டுபேர் கட்டிப் புரள்வதைக் கண்டதே இராந்தலை மேலே தூக்கிப் பார்த்தான். ஒருவன் கீழே யகப்பட்டுக்கொண்டிருக்கிறான். மற்றவன் அவன் மார்புமேல் தன் தேகத்தை யழுத்திக்கொண்டு அவனுடைய தொண்டையைப் பிடித்து அழுத்துகிறான்.

கறுப்பண்ணன் உடனே இருவரையும் பிரித்துவிடுவதை விட்டு முன்னே நன்றாய்ப் பார்த்தான். மேலிருப்பவன் முகம் கீழ்நோக்கி யிருப்பதால் அவன் யாரென்று கண்டுபிடிக்கக்கூடவில்லை. கீழே யகப்பட்டுக் கொண்டிருப்பவன்மட்டும் மலையாளியென்று நன்றாய்த் தெரிந்தது. அவன் மூச்சுவிட முடியாமல் தத்தளிக்கிறான்; கண்கள் பிதுங்கிவிடும்போ லிருக்கிறது. முகம் இரத்தமயமா யிருக்கிறது.

இதைக் கண்டும் கறுப்பண்ணன் தன் நண்பனைக் காப்பாற்ற முயன்றவனல்ல. அச்சமயம் அவன் மனதில் ஒரு சந்தோஷமான யோசனை யுண்டாயிருக்கிறது. உதவியில்லாவிட்டால் இன்னும் இரண்டொரு நிமிடங்களுக்குள் மலையாளி கொல்லப்படுவான் என்று நன்றாய்த் தெரிகிறது. தன் இரகசியமனைத்தும் அவன் அறிவானனதால் இச்சமயம் நாம் பேசாமலிருந்துவிட்டால் அவன் தானே மடிகிறான்; மற்றவனை அவன் எழுந்திருக்கும்போது நாம் சுட்டுத் தள்ளிவிடலாம் என்பதே அச்சண்டாளனுடைய எண்ணம்.



அச்சமயம் மலையாளியின் கழுத்தைப் பிடித்து அழுத்திக் கொன்றுகொண்டிருந்த அம்மனிதன் தீபவொளியில் கீழிருப்பவன் முகத்தைப் பார்த்துவிட்டான். உடனே அவன் பிடித்த பிடியை விட்டுவிட்டு "ஆகா! மலையாளத்தான்!" என்றான்.

அவ்வாறு கூறிவிட்டு அம்மனிதன் உடனே எழுந்து நின்று கறுப்பண்ணனை நோக்கினான்.

கறுப்பண்ணன் அப்போதுதான் அவனை யின்னானென்று தெரிந்துகொண்டு "ஆ லாயர்! நீயா? இதென்ன சமாசாரம்? என்ன நடந்தது?" என்றான். (தொடரும்.)

ஆரணி குப்புசாமி முதலியார்.

---

## பொது சமாச்சாரங்கள்.

ஜப்பான் தேசத்தில் ஒஸாகா என்னும் நகரில் பிரசுரிக்கப்படும் ஒஸாகா மாஞ்சி என்னும் பத்திரிகைக்கு 10 லட்சம் சந்தாதாரர்களும், அஸாஹி என்னும் பத்திரிகைக்கு 10 லட்சத்திற்கு அதிகமிருப்பதாயும் ஆகாய விமானங்களில் ஏறி விஷய சேகரம் செய்யப்பட்டும், அவைகளில் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டும் நடத்தப்படுகிறது. இதுவல்லவா தேச முன்னேற்ற மடைந்திருப்பதற்கு காரணம்.

**நேயர்களே!** நம் நாட்டாரின் பத்திரிகாபிமானத்தை யித்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள். அப்போதேனும் நம்மவர்க்கு உண்மை விளங்குமோ!

* * * * * *

வெள்ளைக் காக்கையென்று விளையாட்டாய்ப் பேசுவார்கள். ஆனால் மாயவரத்தில் சில தினங்களுக்குமுன் ஒரு வெள்ளைக் காக்கை அகப்பட்டிருக்கிறது. ஓர் ஆதிதிராவிடர் தமது வீட்டுக் கொல்லையிலுள்ள ஒரு தென்னைமரத்தில் வசித்திருந்த ஒரு வெள்ளைக்காக்கையைப்பிடித்து விற்றுவிட்டாராம். காகம் நல்ல வெள்ளை. காலும் மூக்கும் சிவப்பு. காகா வென்று கூவுகிறதாம். பட்டமங்கலம் தெருவிலுள்ள சத்திரத்தலைவர் ஸ்ரீமான் காசி செட்டியார் அதனை வளர்த்து வருகிறாராம். மாயவரத்திற்குத் துலா ஸ்நானத்திற்காகச் செல்வோர் அதனைக் கண்டு களிக்கலாம்.

* * * * * *

மலையாளத்தில் பாம்புக்கென ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளதாம். இதன் பூசாரி ஒரு நம்பூரியாம். இக் கோவிலில் உலகத்தில் இல்லாத விஷப் பாம்புகள் அனேக மிருக்கின்றனவாம். ஒருவரையும் இவை தீண்டுவதில்லையாம். இக்கோயிலில் சில சக்கரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது. எனவே இப் பாம்புகளெல்லாம் இங்கும் அங்கும் சுருண்டுகொண்டேயிருக்கின்றனவாம்.

* * * * * *

லண்டன் பட்டணத்து ஜனத்தொகை பெல்ஜியம் தேசத்து ஜனத்தொகைக்கு சரியாயும் ஆஸ்ட்ரேலியா கண்டத்து ஜனத்தொகையை விட இருபது லக்ஷம் ஜாஸ்தியாயுமிருக்கிறதாம். அந்த நகரத்தின் தெருக்களின் மொத்த நீளம் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து மூன்று மைலாம். இந்தத் தெருக்களுக்கு விளக்குப்போட வருஷத்திற்கு மூன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரம் பவுன் செலவாகிறதாம். இத்தெருக்களைப் பாதுகாக்க இருபதினாயிரம் போலீஸ்காரர்கள் இருக்கிறார்களாம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

இரக்தாக்ஷிஞு மார்கழிமீ-கலியுகாதி 5026 சாலிவாகனம் 1847,
பசலி 1334—கொல்லமாண்டு 1099-1100—ஹிஜரி 1343,
இங்கிலீஷ் 1924ஞு டிசம்பர்மீ—1925ஞு ஜனவரிமீ

| மார்கழிமீ | டிசம்பர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | திங் | சது40-55 | பூச30-8 | சித்60 | கதிருக்க, தான்னியம் செலவிட |
| 2 | 16 | செவ் | பஞ்46-8 | ஆயி36-38 | சித்60 | நவக்கிரகசாந்தி செய்ய |
| 3 | 17 | புத | சஷ்50-5 | மக42-3 | சித்42-3அ | யாத்திரை விலக்க |
| 4 | 18 | வியா | சப்52-23 | பூர45-50 | சி45-50ம | திஸ்ரோஷ்டகா |
| 5 | 19 | வெ | அ52-43 | உத்47-48 | சி47-48அ | காலபைரவாஷ்டமி |
| 6 | 20 | சனி | நவ50-55 | அஸ்-47-43 | மர60 | கரிநாள், திஸ்ரோஷ்டகா |
| 7 | 21 | ஞா | தச47-5 | சித்45-35 | சித்60 | தானியம், மாடுவாங்க |
| 8 | 22 | திங் | ஏ41-23 | சுவா41-35 | அ41-35ம | மகராயனம்4-20 சர்வ,மத்வஏகாதசி,சபல ஏகாதசி |
| 9 | 23 | செ | து34-10 | விசா36-8 | மர36-8சி | பிரதோஷம், கரிநாள் |
| 10 | 24 | புத | திர25-23 | அனு29-25 | சித்60 | தானியம்வைக்க, எருவிட |
| 11 | 25 | வியா | ச●16-23 | கேட்21-25 | பி21-25சி | கரிநாள், அமாவாசை |
| 12 | 26 | வெ | அமா6-48 பிர57-0 | மூல14-8 | அ14-8பிர | புஷ்யசுத்தம், அவமாகம் |
| 13 | 27 | சனி | து48-40 | பூரா6-38 உத்59-45 | சித்60 | |
| 14 | 28 | ஞா | திரி40-45 | திரு54-3 | அ54-3மர | |
| 15 | 29 | திங் | சது34-18 | அவி49-43 | சித்60 | |
| 16 | 30 | செ | பஞ்29-30 | சதை47-13 | மர60 | |
| 17 | 31 | புத | சஷ்26-35 | பூரட்46-28 | அ46-28சி | |
| 18 | 1925ஞு ஜனவரிமீ 1 | வியா | சப்25-38 | உத்47-40 | சித்60 | |
| 19 | 2 | வெ | அ26-33 | ரேவ50-38 | அமி60 | |
| 20 | 3 | சனி | நவ29-15 | அசு55-13 | சித்60 | |
| 21 | 4 | ஞா | தச32-25 | பர60 | சித்60 | அடுப்புவைக்க |
| 22 | 5 | திங் | ஏ38-40 | பர※1-50 | சி1-50மர | கிருத்திகை, வைகுண்ட ஏகாதசி,சர்வ,மத்வஏகா |
| 23 | 6 | செவ் | து44-43 | கிரு8-38 | சித்8-38அ | கூர்ம துவாதசி [தசி |
| 24 | 7 | புத | திர51-8 | ரோ15-5 | சித்60 | குளம் கிணறு சீர்திருத்த |
| 25 | 8 | வியா | சது58-5 | மிரு22-35 | மர60 | ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் |
| 26 | 9 | வெ | ○60 | திரு30-13 | சித்60 | ஆருத்திராதரிசனம்,பௌர்ணமி, திருதினஸ்பிருக் |
| 27 | 10 | சனி | பௌ4-8 | புன37-35 | சித்60 | யாத்திரை செய்ய, கோடி |
| 28 | 11 | ஞா | பிர9-50 | பூசம்44-30 | சித்60 | புஷ்யபகுளம் [புடுக்க |
| 29 | 12 | திங் | துதி15-45 | ஆயி48-13 | சி48-13ம | போகிபண்டிகை |

| | | | |
|---|---|---|---|
| செ | | | |
| — கே | 1உ விரு-சு 24 ,, தனு-சுக் | | ராகு |
| சூரி பு-கு | | சனி சுக் | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS

187464